விலை ரூபா 2-00 ★ .12 பக்கங்கள்

# ஈழநாடு

வார மலர் EELANADU VARAMALAR

மலர்: 26 கார்த்திகை 24 ரபி-அவ் 15 யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை (9—12—84) இதழ் 297

UNIVERSITY OF JAFFNA, S.
RECEIVED
10-12-1984
PERIODICALS DIVISION
LIBRARY

## மேலும் 5 இந்திய மீனவர் கரை திரும்பவில்லையாம்!

(சென்னை)

ராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற 5 பேர் கொண்ட மீனவர் கோஷ்டியொன்று இன்னமும் கரை திரும்பவில்லையென்று இந்திய அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அண்மையில் இலங்கைக் கடற்படையினரால் மூழ்கடிக்கப்பட்ட மீன்பிடி இழுவைக் கப்பலுடன் இவர்களும் வேறு படகில் பாக்கு நீரிணையில் மீன்பிடிக்கச்

[12ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

### பெற்றோர், ஆசிரியர்கள் கவலை - ஆத்திரம்,

# பதற்றமான நிலையில் நேற்று ஜி. ஸி. ஈ. பரீட்சை ஆரம்பம்!

## ஊரடங்கு நேரத்தில் மாணவர்கள் வீடுசெல்ல அதிகாரிகள் ஏற்பாடு

(கொழும்பு)

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு பகுதிகளில் நேற்று ஊரடங்குச் சட்டம் நண்பகல் 12 மணிக்கு அமுல் செய்யப்பட்டிருந்தபோதிலும் இப்பகுதிகளில் ஜி. ஸி. ஈ. (சாதாரண)பரீட்சைகளை இடையூறு இன்றி நடைபெறுவதற்கான ஏற்பாடுகள் [illegible] திருந்தனர். யாழ்ப்பாணத்தில் ஓரிரு பரீட்சை நிலையங்களில் சிறு அசம்பாவிதம் ஏற்பட்டதாகத்தகவல் கிடைத்தது.

பரீட்சை முடிவுற்றதும் பரீட்சார்த்திகள் தம் இருப்பிடங்களுக்கு தடையின்றி செல்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.

இ. போ. ச. பஸ்கள் பரீட்சை நடைபெற்ற இடங்களுக்குச்சென்று மாணவர்களை ஏற்றிச் சென்றன. இப்பஸ்களின் இலக்கங்களும் இதர விபரங்களும் ஆயுதப்படையினருக்கு அறிவிக்கப்பட்டிருந்ததின் பேரில் அவைகளை ஊரடங்கு நேரத்தில் தடை செய்யாது ஓடுவதற்கு அனுமதிக்கப்பட்டது.

பரீட்சைகள் நடைபெறவிருந்த வேளையில் ஊரடங்குச் சட்டம் எதிர்பாராதவிதமாக நேரத்துடன் அமுல் நடத்தப்பட்டதால் பரீட்சார்த்திகள், அதிகாரிகள், மற்றும் பெற்றோர் அனைவரும் குழப்பத்துக்குள்ளாகியிருந்தனர்.

### அதிகாரிகள் நடவடிக்கை

இந்தப் பிரச்னைபற்றி கல்விப் பணிப்பாளர்திரு சிமியாம்பிள்ளைக்கும்அரசாங்க அதிபர் திரு. பஞ்சலிங்கத்துக்கும் அறிவிக்கப்பட்டது அவர்கள் துரிதமாகச் செயல்பட்டு யாழ். பொலிஸ் அதிபர் திரு ஐ ரி கனகரத்தினம், வடபகுதி இராணுவ இணைப்பதிகாரி பிரிகேடியர் நளின் செனிவிரத்னு ஆகியோருடன்தொடர்பு கொண்டு நிலைமைகளை விப

(12-ம்பக்கம் 1ம்கலம் பார்க்க)

## யாழ். தேவி பிந்தியே வந்தது

[யாழ்ப்பாணம்]

நேற்று கொழும்பிலிருந்து யாழ்ப்பாணம் வந்த யாழ்தேவி

(12ம் பக்கம் 4ம் கலம் பார்க்க]

## மத்துகாமம் பகுதியில் 4 தமிழ் இளைஞர் கைது

(கொழும்பு)

அகலவத்தையிலுள்ள றபர் ஆராச்சி நிலையத்தைத் தாக்குவதற்குத் திட்டமிட்டிருந்தார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 4 தமிழ் வாலிபர்கள் மத்துகாமம் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களிடமிருந்து ஆயுதங்களும் வெடிமருந்துகளும் கைப்பற்றப்பட்டிருப்பதுடன் மேற்படி நிலையத்தின் வரைபடம் ஒன்றையும் எடுத்துள்ளனராம் ஜனவரி 14ம் திகதி இத் தாக்குதலை இவர்கள் [illegible] கத்திட்டமிடப் பட்டிருந்ததாகக் கூறும் பொலிசார் குறித்த தகுதியிலுள்ள தமிழ்குடும்பங்களிடம் இவ்விளைஞர்கள் பற்றிய விபரங்களை விசாரித்து அறிந்து வருகின்றனர்.

### அனுராதபுரக் காட்டில் தேடுதல்

அனுராதபுரத்தில் தொர

[12ம் பக்கம் 3ம் கலம்பார்க்க)

## மட்டக்களப்பில் பரீட்சை அமைதியாக நடந்தது!

[மட்டக்களப்பு]

மட்டக்களப்புப் பகுதியில் நேற்று ஜி ஸி ஈ சாதாரண தரப் பரீட்சைகள் மிக அமைதியான முறையில் இடம் பெற்றன.

இங்கு மாலை 6 மணிக்கே

(12ம் பக்கம் 2ம் கலம் பார்க்க)

### பயணிகள் எரிக்கப்பட்ட

## செய்திக்கு மறுப்பு

[கொழும்பு]

செட்டிகுளம் பகுதியில் ஒரு பஸ்ஸில் பிரயாணம் செய்த 17 பயணிகள் எரிக்கப்பட்டதாகக் கூறப்படுவதுபற்றி எதுவிதத் தகவலும் இல்லை என்று தொடர்பு சாதனக் குழுத் தலைவர் டாக்டர் விக்கிரம வீரசூரிய தெரிவித்தார்.

மேற்படி தகவலை அனுராதபுரப் பகுதியைச் சேர்ந்த அரச அதிபரும், மாவட்ட அமைச்சரும் தமக்குத் தெரிவித்தத'க

(12-ம் பக்கம் 4ம்கலம் பார்க்க)

## வவுனியா கிராமங்களில் ஆயுதக்கும்பல் அட்டகாசம்!

### 20 பேர்வரை பலி, வீடுகள் தீக்கிரை!!

(வவனியா நிருபர் ரி விவேகராசா)

வவுனியா மாவட்டத்தில் உள்ள பல்வேறு கிராமப்புற பகுதிகளில் பல குடிமனைகள் தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. சுமார் 20பேர் வரை கொல்லப்பட்டிருக்கலாம் எனக்கருதப் படுகின்றது மேலும் பலர் ஆபத்தான காயங்களுக்குள்ளாகியுள்ளனர்.

மருதன்குளம், துச்சள்குளம். கோயில்குளம், ஆசிக்குளம் ஆகிய இடங்களிலேயே இந்த வன்முறைகள் கடந்த ஆறு தினங்களாக இடம்பெற்றன

மருதன்குளம் என்ற இடத்தில் கடந்த 3ந் திகதி சின்னப்பு என்ற வயோதிப விவசாயி, தடிகள் கத்திகளுடன் வந்த கும்பலொன்றினால் வெட்டிக் கொலைசெய்யப்பட்டார்.

அக்கிராமத்தில் அன்றிரவு ஆறுவீடுகள் சூறையாடப்பட்டுத் தீயிடப்பட்டன. இத்தீவைப்பில் பத்திரிகை நிருபர் ஒருவரின் இல்லமும் சேத

(12ம் பக்கம்3ம் கலம் பார்க்க)

### சிறுமி மீது பலாத்காரம்?

## இளைஞனை வளைத்துப் பிடித்த பெண்கள் குழு

[சாவகச்சேரி]

பதினைந்து வயதுச் சிறுமி ஒருவரைத் திட்டமிட்டு ஏமாற்றி பலாத்காரத்தைப் புரிந்தார் என்ற குற்றச் சாட்டின் பேரில் இளைஞர் ஒருவரை சில தினங்களுக்கு முன் சாவகச்சேரியில் சுமார் 25க்கும் மேலான இளம் பெண்கள் சுற்றிவளைத்துப் பிடித்தார்கள்

சாவகச்சேரி உதவி அரசாங்க

[12ம் பக்கம் 5ம் கலம் பார்க்க]

## வன்முறை மரணங்களை அறிவிப்பதில் பாரபட்சம்!

### ஜே. ஆருக்கு அமிர் தந்தி!!

[சென்னை]

''இலங்கையின் வடபகுதியில் வன்முறைகளில் கொல்லப்படுபவர்கள் பற்றி அறிவிப்பதில் இலங்கை அரசு பாரபட்சம் காட்டுகின்றது'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலாளர் நாயகம் திரு அ. அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

இலங்கை அதிபருக்கு அனுப்பி வைத்துள்ள அவசரத் தந்தியிலும், பாரதப் பிரதமருக் அனுப்பியுள்ள கடிதத்திலுமே மேற்கண்டவாறு திரு.

(12ம் பக்கம் 5ம்கலம் பார்க்க)

## கைதிகள் இடமாற்றம்

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம் கோட்டை சிறைச்சாலையில் இருந்த கைதிகள் நேற்று ரயில்மூலம் மட்டக்களப்புச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டதாகத் தெரிய வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### வாடகைக்கு

சாப்பாட்டுடன் கூடிய 2 அறை வாடகைக்கு உண்டு. மருத்துவம் படிப்பவர்கள் அல்லது தொழில் புரிபவர்கள் விரும்பத்தக்கது. தொடர்பு: 154/8B, ஆத்திசூடி வீதி, கந்தர் மடம், யாழ்ப்பாணம். 949

யாழ்ப்பாணம்: மின்சார, தண்ணீர் வசதியுள்ள 4 அறை வீடு சுண்டிக்குளியில் உடனடியாக வாடகைக்கு உண்டு. கச்சேரிக்கும் பள்ளிக்கூடங்களுக்கும் அண்மையில் உள்ளது. மாதாந்தவாடகை ரூபா 500/- வைப்புப் பணம் தேவைப்படும் 8-12-84 க்குப் பின் பார்வையிடலாம். தொடர்பு விலாசம்: செல்வநாயகம், 5, ருக்கா ஒழுங்கை, சுண்டிக்குளி. 942

### தவறிவிட்டது

யாழ்ப்பாணம் இருந்து மன்னார் போகும் பாதையில் பஸ்ஸில் சில்வர் பிறேம் போட்ட மூக்குக் கண்ணாடி ஒன்று தவறி விட்டது. கண்டெடுப்பவர்கள் 49B, இராசாவின் தோட்டம், யாழ்ப்பாணம். என்ற விலாசத்தில் ஒப்படைத்தால் ரூபா 100/- சன்மானம் வழங்கப்படும். 941

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த. உயர்தர பரீட்சை

ஆகஸ்ட் 1985

மீட்டல்

வகுப்புகள்

3-12-84ல் ஆரம்பமாகும் என்று அறிவிக்கப்பட்ட வகுப்புக்கள் போக்குவரத்து வசதியீனம் காரணமாக தை மாதத்திற்குப் பின் போடப்பட்டுள்ளது. ஆரம்பமாகும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

அதிபர்.

தொலைபேசி எண்: 22617,
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். (946)


# மௌனத்தின் மாட்சி

(கடந்த வாரத் தொடர்ச்சி)

மௌனம் பற்றிச் சிந்தித்தபோது எனது பேத்தியார் (அன்னையின் அன்னை) சொன்ன கதையொன்று நினைவுக்கு வருகிறது. இளம் பெண்கள் அநாவசியமாக பேசப்படாதென்பதற்கு ஓர் உதாரணமாக இதனைச் சொன்னார்,

ஒரு குடும்பத்தில் மூன்று பெண்கள் இருந்தனர். அவர்களுக்கு விவாகமாகவில்லை. கிராமத்தில் கலியாணம் செய்து கொடுக்கமுடியவில்லை. ஏனென்றால் மூன்று பேரும் மூக்கால் பேசுபவர்கள். தூரத்திலிருக்கும் கிராமமொன்றில் மூத்த பெண்ணுக்கு வரன் தேட முன் பெற்றோர் யோசித்தார்கள். மூத்த பெண்ணை ஒரு விதமாக கலியாணம் செய்து கொடுத்தால் அவள் மூலமாக மற்றப் பெண்களின் பேச்சுக் குறை வெளியே தெரிந்து மற்ற இரண்டு பெண்களுக்கும் விவாகம் செய்து கொடுப்பது கஷ்டம் என்று. ஆகையால் மூன்று பெண்களையும் ஒரே பந்தலில் விவாகம் செய்து கொடுப்பதே நல்லதென்று முடிவு செய்தனர் கஷ்டப்பட்டு வெளிக் கிராமங்களிலிருந்து மூன்று மாப்பிள்ளைகளைத் தேடி எடுத்து விட்டார்கள். கலியாண நாளில் மூன்று பெண்களுக்கும் வாய் திறக்கப்படாதென்று கட்டளையிட்டனர். கலியாண வைபவம் நடந்து கொண்டிருந்த பொழுது தாலி கட்டு முன் மூத்த பெண் ஏதோ தடுமாறி வாயை திறந்து ஏதோசொல்லி விட்டாள். அந்த மாப்பிள்ளை மணவறையிலிருந்து ஓடிவிட்டான். இரண்டாவது பெண் தமக்கையைப் பார்த்து உன்னைத் தானே பேசவேண்டாமென்று சொல்லி வைத்தோமென்றால் உடனே இரண்டாவது மாப்பிள்ளையும் ஓடிவிட்டான். இத்துடன் மூன்றாவது மகளுக்காவது தாலி கட்டி விடலாமென்று பெற்றோர் எதிர்பார்க்கும் சமயத்தில் இளையவள் தான் தான் நல்ல பிள்ளை இவ்வளவு நேரமும் பேசவில்லை என்றாள்.

## நா. மாணிக்க இடைக்காடர்

மூன்றாவது மாப்பிள்ளையும் இதைக்கேட்டு ஓடி விட்டான் இதுதான் பேர்த்தியார் சொன்ன கதை ஒரு சிறுகதையால் எவ்வளவு அறிவை எனது பேர்த்தியார் இக்கதை மூலம் இளைய சந்ததியினருக்குத் தந்துள்ளார்.

லேடி சைமன் தமது கணவரிடம் ஒன்றும் செய்யாதிர்கள் என்றதன் அர்த்தமும் யாரும் கோபம் மூட்டும் வகையில் சொன்னால், செய்தால் உடனே ஒன்றும் செய்ய வேண்டாமென்பதே. ஒரு நாய் குரைத்தால் கோலைநீட்ட வேண்டாம் நாய் கடித்தால் நாம் நாயைக் கடிப்பதில்லை.

நான் வவனியா அரசாங்க அதிபராக விருக்கும் பொழுது ஒரு முறை ஒட்டிசுட்டானுக்குச் சென்று அவ்விடத்து உதவி அதிபர் அமரர் பெருமையினருடன் உரையாடிக் கொண்டிருந்தேன். அந்நேரம் ஒருவர் அழுது கொண்டு தேகத்தில் பல காயங்களுடன் வந்து பெமையினருக்கு முறையிட்டார். வந்தவர் தனது கிராமத்திலுள்ள வேறொருவர் தன்னை நல்லாக அடித்து விட்டதாகச் சொன்னார். உடனே அக் கிராமத்திற்குப் போய் விசாரிக்க வேண்டுமென்று எனக்குத் தோன்றிற்று, ஆனல் பெருமையினர் 'கொஞ்சம் பொறுப்பம்' என்று கூறினார். நாம்வேறு அரசாங்க அலுவல்களைக் கவனித்தோம் அரைமணி நேரத்தில், அடித்தவன் என்று கூறப்பட்ட ஆள் முதல் வந்து முதல் முறையிட்டவரே சண்டை தொடக்கினரென்றார். பெருமையினர் எல்லாம் விசாரித்துத் தனது தீர்ப்பைக்கொடுத்தார். பிறகு இப்படிப்பட்ட விடயங்களில் தான் ஒரு பொழுதும் உடனே ஒன்றும் சொல்வதில்லை என்று என்னிடம் சொன்னார். இதனல் நீதியைச் சரியாக வழங்கக் கூடியதாயிருக்கிறதென்றார் அவர்.

இன்னுமொரு உதாரணம் கூறுகிறேன்;- இரத்தினபுரியிலிருந்து நீர்பாசன இலாகாப் பொறியிலாளர் அவருடைய அதிபருக்குக் காரசாரமான ஒரு கடிதத்தை எழுதி தனது நேரடி உயர் அதிகாரி பண்டாரவளையில் கடமையாற்றும் பொறியியலாளர்மூலம் அனுப்பினார். பண்டாரவளைப்பொறியிலாளர் (எனது நண்பர்) அக் கடிதத்தைஅனுப்பாமல்தானே வைத்துக் கொண்டார். மறு நாள்காலை இரத்தினபுரிப் பொறியியலாளர் பண்டாரவளை சென்று உயர் அதிகாரியைச் சந்தித்து ''ஐயா கடிதத்தை அனுப்பி விட்டீர்களா? என்று கேட்டார். இல்லையென்றதும் அனுப்பி விட்டீர்களோவென்று பயந்து பயந்து வந்தேன் என்றார். பிறகு அக்கடிதத்தைக் கொழும்புக்கு அனுப்பவில்லை. எனது நண்பன் அக்காலத்துப் பண்டாரவளை பொறியியலாளர், தான் இதுபோன்ற கடிதங்களுக்கு உடனே ஒன்றும் செய்வதில்லையென்று கூறினார்.

இந்த உதாரணங்கள் கூறுவதால் எல்லாவிடயங்களிலும் உடனே ஒன்றும் செய்ய வேண்டாமென்பது எனது கருத்தல்ல. ஒருவருக்கு மாரடைப்பென்றால் யோசிப்பதற்கு ஒன்றுமில்லை. உடனே மருத்துவமனைக்குக் கூட்டிக் கொண்டு போகவேண்டும்; தாமதிக்கப்படாது எது உடனே செய்யவேண்டும்; எது பிறகு செய்யவேண்டும். என்று தெரிந்துகொள்ளவேண்டும் இந்தக்கட்டுரையில் கூறுவதென்னவென்றால் கோபதாபம் வரக்கூடிய விடயங்களில் உடனே ஒன்றும் செய்யாமல் யோசித்துச் செய்யவேண்டுமென்பதே.

லேடி சைமனின் கடைசிப் புத்திமதியான 'ஒற்றுமையாய் இராதீர்கள்' (be nothing) என்பதைக் கணித பாணியில் சொல்லுவதாயிருந்தால் பூஜ்யமாயிருங்கள் என்று கூறலாம். இந்தக் கூற்றில் ஏற்கெனவே கூறிய இரு அம்சங்களும் அடங்கியுள்ளன. 'சும்மா இரு' என்று யோக சுவாமிகள் கூறியதும் இதுவே. சுவாமிகள் இதை இறைவனை அடைவதற்கு மனத்தையடக்கி ஒரு வழிப்படுத்தவே கூறியிருக்கிறார். சோம்பேறியாயிரு என்று சொல்லியதாக எண்ணிவிடக் கூடாது. பொது வாழ்விலும் இக்கட்டான நிலைகளிலும் இம்முறையைக் கையாளலாம் ஒரு கத்தோலிக்க ஞானி (ஞானி அகஸ்ரின் என்று நம்புகிறேன்) ஒருமுறை கூறினார். யாரும் அநீதி செய்தால் உடனே தான் தனது அறைக்குச் சென்று பதினைந்து நிமிடத்திற்கு இறைவணக்கம் செய்து விட்டு அவ்விடயத்தை மனத்திலிருந்து அகற்றிவிடுவாராம். ஆமையைப்பாருங்கள்; யாரும் அதைத் தொட்டால் தலையை உள்ளே இழுத்துக் கொள்கிறது பிறகு தன்னுடைய நேரமெடுத்து வெளியே தலையைக் காட்டும். இதுவே கடவுள் இதற்குக் கொடுத்த பாதுகாப்பு அப்படி நாங்களும் இக்கட்டான நிலைகளில் சில நேரமாவது சும்மா இருக்கலாம்.

மட்டக்களப்பைச் சேர்ந்த அமரர் முதலியார் வல்லிபுரம் அவர்கள் நான் இலங்கை சிவில் சேவிஸில் சேர்ந்த பொழுது ஓர் அறிவுரை கூறினார். ''தம்பி அரசாங்கசேவையைத் தொடங்கப் போகிறீர்கள் நான் உங்களுக்கு ஒரே ஒரு புத்திமதி கூறுகிறேன். எல்லாவற்றையும் நல்லா இரண்டுகாதாலும்கேளுங்கள். ஆனல் அதிகம் பேசவேண்டாம்'' இந்தப் புத்திமதி எனக்கு எவ்வளவோ பயன் தந்திருக்கிறது. இதோடு லேடி சைமனின் குறிப்பையும் சேர்த்தால் எப்பொழுது என்ன பேசவேண்டும் என்ன பேசப்படாது; என்ன செய்ய வேண்டும் என்ன செய்யப்படாது. என்ற அறிவை வளர்த்தோமானல் இன்னல்சூழ் மின்னல் வாழ்வைச் சமாளிக்கலாம்.


### வாடகைக்கு

3 அறைகளுடன் புதிய வீடு வாடகைக்குண்டு. தொடர்பு: 15/7, பொற்பதி றோட், கொக்குவில் கிழக்கு. (குளோப்டிராக்மாற் அருகாமையில்). 970

தரமான
வீடியோ
படப்பிடிப்பிற்கு
சித்திராலயா


# வாகன அனுமதிப்பத்திரம் இன்னும் வழங்கப்படவில்லை

(யாழ்ப்பாணம்)

வாகனங்கள், சைக்கிள்கள் போக்குவரத்திற்கான அனுமதி பத்திரங்கள் இன்னும் வழங்கப்படவில்லை.

இதற்கான அனுமதி பத்திரங்கள் இன்னும் அச்சிட்டு முடியவில்லை என்று சம்பந்தப்பட்ட வட்டாரங்கள் தெரிவித்தன.

இம்மாதம் 10ம் திகதி இதற்கான விண்ணப்பபத்திரங்கள் உதவி அரசாங்க அதிபர் காரியாலயங்கள் மூலம் வழங்கப்படும் என ஏற்கனவே தெரிவிக்கப்பட்டிருந்த போதிலும் பத்திரங்கள் அச்சாகாத காரணத்தால் இது சாத்தியம் இல்லை எனக்கூறப்படுகிறது.

வாகனங்கள் வைத்திருப்பதற்கு மட்டும் தற்போது உதவி பொலிஸ் அதிபரினல் அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டுள்ளது

சைக்கிள் வைத்திருப்போர் சைக்கிள் வாங்கிய அத்தாட்சி பத்திரம், சைக்கிள் இலக்கம் பெற்ற பற்று சீட்டு ஆகியவற்றையும் சமர்ப்பிக்கவேண்டும் என்று கூறப்படுகிறது.


## முதலாவது ஆண்டு நினைவஞ்சலி

மட்டக்குளிய சென்ஜோன்ஸ் கல்லூரியின் முன்னைநாள் ஆசிரியரும், தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி முன்னைநாள் கனிஷ்ட அதிபரும், தையிட்டி கணேச வித்தியாசாலை ஆசிரியருமாகிய,

அமரர் சி. அம்பலப்பிள்ளை அவர்கள்

மலர்வு: 1924 | 03 | 27



உதிர்வு: 1983 | 12 | 09

எமதன்புத் தெய்வமே! நீங்கள் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு அகன்றுவிட்டது ஆனல் உங்களது நினைவோ எம்மைவிட்டு ஒரு போதும் அகலாது.

உங்களது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்

திருமதி புவனேஸ்வரி அம்பலப்பிள்ளை (மனைவி)
பிள்ளைகள் சோதிருபன்,
குகானந்தி, சிவரூபன்,
உறவினர்.

''புவனபதி''
மாவிட்டபுரம்,
தெல்லிப்பழை.

947

துணுக்காய் பகுதி ப.நோ.கூ. சங்கம் துணுக்காய்.

## வெற்றுச் சாக்குகள் பழுதடைந்த பரல்கள் விற்பனைக்கு கேள்வி கோரல்

மேற்படி சங்கத்தால் கீழ் காட்டப்பட்ட வெற்றுச் சாக்குகள் வெற்று பரல்கள் விற்பனைக்கு கேள்வி கோரப் படுகின்றன.

கேள்விகள் அனைத்தும் ரூபா 10/- செலுத்தி எமது சங்கத்தில் பெற்றுக்கொள்ளக்கூடிய விண்ணப்பபத்திரத்தில் பூர்த்திசெய்து 22-12-84ம் திகதி நண்பகல் 12மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாக ''பொது முகாமையாளர்,, து. ப. ப நோக்குக் கூட்டுறவுச் சங்கம், துணுக்காய்'' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். விண்ணப்பதாரிகள் மீளப்பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 500/- விண்ணப்பப் படிவம் பெறும்போது சங்கத்தில் கட்டுதல் வேண்டும். தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் ''சாக்கு கேள்வி'' என குறிப்பிடல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| 01. | அரிசிச்சாக்கு (2 புசல்) | 833 |
| 02. | அரிசிச் சாக்கு (3 புசல்) | 444 |
| 03. | மாச்சாக்கு (பிறிமா) | 1251 |
| 04. | சீனிச்சாக்கு (பெரியது) | 502 |
| 05. | சீனிச்சாக்கு (50 கிலோ) | 200 |
| 06. | ஏனையவை | 421 |
| 07. | உப்பு பாக் | 477 |
| 08. | கழிவு சாக்கு | 200 |
| | | 4328 |
| 01. | வெற்று பரல்கள் | 50 |

இப்பொருட்களை வேலைநாட்களில் காலை 9மணி முதல் மாலை 5மணிவரை தலைமைச் சங்கத்தில் பார்வையிடலாம்.

சு. சுந்தரலிங்கம்
பொதுமுகாமையாளர்

971


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு வாரமலர்
EELANADU VARA MALAR

# ஹிரோஷிமா ஆகிவிட்ட போபால்!

சூழல்மாசு காரணமாக இந்திய மத்திய பிரதேசத்தின் போபால் நகரத்துப்பேரழிவு 2வது உலகயுத்தத்தின் போது அணுக்குண்டால்சிதைந்த ஹிரோஷிமாவைநினைவுபடுத்துவதாயுள்ளது. இந்தப்பயங்கர அழிவு உலகின் ஏனைய தொழில் நகரங்களை விழிப்புறச் செய்யுமென்றே நம்பலாம்.

நள்ளிரவு கடந்து, அதிகாலை விடியலை நோக்கி உலகு சுழன்றபோது, அந்தத் துயரம் நிகழ்விற்கான ஆரம்பம் தொடங்கியது.

உறக்கத்தில் மக்கள் ஆழ்ந்திருந்த வேளையில், அந்த நகரத்தின் சுத்தமான வழியில், உயிர்க்கொல்லி விஷவாயு பரவத்தொடங்கியது.

### போபால் நகரம்

இந்தியாவின் மாநிலங்களில் ஒன்று மத்திய பிரதேசம் ஆகும். பெயருக்கு ஏற்ப, மத்திய இடவமைப்பினைக் கொண்ட இந்த மாநிலம்' ஏனைய இந்திய மாநிலங்களிலும் பார்க்க மிகப்பெரியது. இந்த மாநிலம் ஏறத்தாள 4,43,459 சதுர கிலோ மீற்றர் பரப்பினை உள்ளடக்கியதாகவும், 42/1 கோடி மக்களைக் கொண்டதாகவும் விளங்குகிறது. மத்திய பிரதேசத்தில் ஒரு லட்சம் மக்களுக்கு மேல் வாழ்கின்ற ஆறு நகரங்களில் ஒன்று போபால் (BHOBAL) ஆகும். மத்திய பிரதேசத்தின் மேற்குப்புறநகரமான போபாலில்' ஏறத்தாழ 2 2/1 இலட்சம் மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

போபால் நகரத்தின் வடகிழக்குப் பகுதியில், யூனியன் காபைட் இந்தியா லிமிட்டட் [Union Carbide Indian Ltd] என்ற நிறுவனத்தின் பெற்றோலிய-இரசாயனப் பொருட்களை உற்பத்தி செய்யும் [Petro Chemicals] தொழிற்சாலை யொன்றுள்ளது இத் தொழிற்சாலை மிகப் பிரதானமாகப், பூச்சிநாசினிகளையே உற்பத்தி செய்து வருகின்றது.

✶ கந்தையா குணராசா

பூச்சிநாசினி உற்பத்திக்கு தேவையான நச்சு அமிலங்கள் இத்தொழிற் சாலையின் நிலக்கீழ் அறைகளின் தாங்கிகளில் சேமித்து வைக்கப்பட்டிருந்தன. இந்த நிலக்கீழ்த் தாங்கிகளிலிருந்து. விஷவாயுக்கசிவு ஏற்பட்டதை. அன்று எவரும் கவனிக்கவில்லை.

### பெரும்

### அவலச்சாவுகள்

நள்ளிரவு கடந்து, அதிகாலை விடியற் பொழுதில், நகரம் உறங்கிக் கொண்டிருந்தபோது விஷவாயு வேகமாகக் காற்றோடு கலந்து, தொழிற்சாலையின் சுற்றுப்புறத்தில் கவிந்தது விஷவாயுவைச் சுவாசித்ததால், இரவு உறக்கத்திற்குச் சென்ற நூற்றுக்கணக்கானவர்கள் உறக்கம் நீங்கி எழவில்லை ஆயிரக்கணக்கானோர் தும்மல், இருமல், கண்ணெரிவு, உடலெரிவு என்பவற்றுடன் எழுந்தார்கள். மரங்களில் அமர்ந்திருந்த காகங்கள், இலைகள் உதிர்வதுபோல இறந்து விழுந்தன. நாய்கள், மாடுகள் என்பன நின்ற நின்ற இடங்களிலேயே மயங்கிச் சரிந்தன. உறக்கம் கலைந்து எழுந்த நூற்றுக்கணக் கானவர்கள், மயங்கிச் சாய்ந்தார்கள்.

நகரத்தின் மூலைமுடுக்கெலலாம் மரண ஓலங்கள் எழுந்தன. விஷவாயு பரவிய செய்தியும் எங்கும் பரவியது. மக்கள் தங்கள் வீடுகளை விட்டு வெளியில் கூடத்தொடங்கினார்கள் வாகன வசதி படைத்தவர்கள் நகரத்தை விட்டு வெளியே விரைந்து தங்களைக் காப்பாற்றிக் கொண்டார்கள். வீதிகளில் ஓடியவர்களில் பலர் வீதிக்கரைகளில் விழுந்து துடித்து இறந்தார்கள்.

போபால் நகரத்தின் வீதிகள் வீடுகள் யாவற்றிலும் சடலங்கள்! யுத்தக்களத்தின் பிரேதக் குவியல்களாக, போபால் நகரம் காட்சிதந்தது. விஷவாயு அரக்கன் தன் கரங்களை பரத்திப் பரவிவிட்டான்.

அதன் கொடுமையால், இதுவரை 2400 மக்கள் இறந்துள்ளார்கள். 50 ஆயிரம் பேர் வரை கண்பார்வையை இழக்கும் அபாயத்தை எதிர்நோக்கியுள்ளனர். இதுவரை 2000 பேர்முற்றுகப்பார்வையைஇழந்துள்ளனர். போபால் நகரத்தின் 2½ இலட்சம் மக்களில் 25சத வீதமானவர்கள், விஷவாயு தாக்குதலால் கொடூரமாகத் தாக்கப்பட்டுள்ளனர்.

### இதுவரை உலகு

### கண்டறியாதது

உலகில் இதுவரை இவ்வளவு பெருந்தொகையான மக்கள் சூழல் மாசடைதலின் விளைவாக உயிரிழந்தும் ஊனமுற்றும் துயரடைந்தது கிடையாது. நவீன தொழில் நுட்பவியல் காரணமாக உலகம் இன்று எதிர்நோக்கும் பிரதான பிரச்னை, சூழல் மாசடைதலாகும்.

### காங்கேசன்துறையில்

தொழில் மயமான நகரங்களில் சுற்றுடல், மனிதனின் ஆக்கமாகவே தோன்றுகிறது. இத்தொழில் நகரங்கள் புகை மண்டலங்களினாலும் மூடப்பட்டுள்ளன. தொழில் முறையியல் வளர்ச்சி சிலருக்குப் பணவருவாயை அளித்துள்ள போதிலும் ஏராளமானோருக்குத் துன்பத்தையே அளிக்கின்றது. உதாரணமாக மேற்கு ஜேர்மனிலுள்ள நூர் பள்ளத்தாக்கு புகைமண்டலத்தினால் மூடப்பட்டிருக்கின்றது. காங்கேசன்துறை சீமெந்துத் தொழிற்சாலைக்கு இருமருங்கும் மக்கள் வாழமுடியாத சூழ்நிலையும், பயிர் செய்ய முடியாத சூழ்நிலையும் உருவாகிவிட்டன. இச்சுற்றுடல் தாவரங்கள் யாவும் சீமெந்துத் துகளால் மூடப்பட்டுள்ளன. காற்று மாசடைந்துள்ளது.

நகரங்களில் டீசல், பெற்றோல் முதலான எரிபொருட்களை எரித்தபடி புகையைக் கலக்கியவாறு விரைகின்ற கோடிக்கணக்கான வாகனங்களும், தொழிற்சாலைகள் கக்குகின்ற புகையும் வளியை மாசடைய வைத்துள்ளன.

ஜப்பான் வீதிகளில் சுவாசிப்பதற்குத் தேவையான சுத்தமான வளி இல்லை. அதனால்வீதிச்சந்திகளில் ஒட்சிஜன் சிலிண்டர்களை மக்களுக்காக வைத்துள்ளார்கள்.

வளியிலுள்ள அழுக்குகள் மழைநீருடன் கலந்து நீரையும் நிலத்தையும் மாசடைய வைக்கின்றன. மழைநீர் குடிநீர்த்

(11ம் பக்கம் பார்க்க)

## பழையதும் புதியதும்

காலால் நடந்து நடந்து சென்றுதான் நாடெங்கும் நல்ல கருத்தைப் பரப்பினள் நல்ல தமிழ் மூதாட்டி ஔவை. தொலையாத வழிநடந்து, என்றும் அழியாத பாட்டுப்பாடி உலகில் சிறந்தவள் பாட்டி.

செருக்குப் பிடித்த அரசர்கள் அனுப்பும் பல்லக்கிலே ஏறமறுக்கும் மனத்திடம் பெற்றவள் மூதாட்டி. நாலு மைல் தொலைவாயினும் நடந்து தள்ளுவதே ஔவையின் வாழ்க்கைமுறை.

காலால் நடந்து தலையால் சிந்தித்துக் குறிக்கோள் கொண்ட வாழ்வைப் போதித்த மூதாட்டியின் முதற் பாடம் ''அறஞ்செயவிரும்பு''. 'தார்மிக சமுதாயம் அமை' என்று சொல்லவில்லை.

மூதாட்டியின் ஞானமுதிர்ச்சியை அறிய முடியாத நாம் அங்காடியில் ஒரு சிலையாவது எழுப்புகின்றோம்; தார்மீகத்துக்கெழுப்பிய சிலை என்றறியாத குண்டர்கள் அதனைத் தகர்ப்பது அநாகரிகமா?

அதுபழையதாயின் புதியது இது; கார்பன் மொனொக்சைட் (CO) என்ற நச்சுக்காற்று என்ன விளைவுகளை உண்டாக்கும் என்று ஆராய்ந்தவர் பேராசிரியர் ஹல்டேன். அறைக்குள் தம்மைப் பூட்டிவைத்து அப்புகையை இழுக்க, 90 நிமிடத்தில் வலிப்பு வந்துவிட்டது.

உயிரைப் பணயம் வைத்து விஞ்ஞானக் கருத்துகளை மேனாட்டார் கண்டுபிடித்து வெற்றியும் காண்கின்றனர்.

தொழில் நுட்பம் என்று அரற்றி வாழ்க்கை முறை மாறுபட்ட சூழலில் விஷக்காற்றை நழுவவிட்டால் விளைவென்னவென்பதைக் காண ஆயிரக்கணக்கில் உயிர்த்தியாகம் செய்கின்றோம்.

உங்கள் திருப்தி எங்கள் மகிழ்ச்சி

லங்கா சீமெந்து
LANKA CEMENT

1978-ம் ஆண்டு B. S. S. 12 தரத்திற்கு உற்பத்தியாக்கப்பட்டு C. I. S. I. R. ஆல் உத்தரவாதம் அளிக்கப்பட்டது.

'லங்கா சீமெந்து' 'LANKA CEMENT'

முதற்தரமான போட்லண்ட் (PORTLAND) சீமெந்து உற்பத்தியாளர்கள்.

'லங்கா சீமெந்து லிமிட்டட்'
LANKA CEMENT LIMITED

சகல கட்டிட நிர்மாண வேலைகட்கும் பாவிக்க உகந்தது
'லங்கா சீமெந்து'
தேவையான சீமெந்தை உடனடியாக பெற்றுக்கொள்ள காசுக்கட்டளையுடன் இன்றே நாடுங்கள்




விநியோகப்பகுதி,
லங்கா சீமெந்து லிமிட்டட்
கீரிமலை ரோட்,
காங்கேசன்துறை.
போன் :- 22605

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொடர் நவீனம்

த. வைத்திலிங்கம்



# பூம் பனிமலர்கள்

## 6

சொலி வைத்தார் போல் கலாவும் அன்று பிரமாதமாக அலங்காரம் செய்து வந்திருந்தாள்.

முதல்நாள்தான் ஒரு புதுச் சேலை எடுத்திருந்தாள்.

புதுச்சேலை வாங்கினுல்அதை வைத்து அழகு பார்க்கும் பழக்கம் அவளுக்கு என்றுமே இருந்ததில்லை.

அடுத்தநாளே அதைஉடுத்து அழகு பார்த்துவிடுவாள்.

''கண்ட பாவனையில் கொண்டை முடிப்பாயடி நீ! இருக்கிற சேலை பத்தாது எண்டு இதையும் எடுத்துக் கொண்டுவந்திட்டாள்...! எட எடுத்தனி வச்சிருந்து நல்ல நாள் பெரியநாள் என்றுபார்த்துக்கட்டவேண்டாமே, எடுத்தவுடனே சாத்திக்கொண்டு நிற்கிறு...!''

—கலாவின் தாய் சிவபாக்கியம் கத்துவாள்.

''அம்மா பெட்டியில் வச்சு அழகு பார்க்க நான் சேலை வாங்கவில்லை! கட்டத்தான் வாங்கினனுன்''.

-வெகு அலட்சியமாகப் பதிலிறுப்பாள் கலா.

''என்னெண்டாலும்செய் எல்லாம் உன்ரை எண்ணம் தானே...!''

தாய் அலுப்புடன் கூறினுலும், தனது மகள் புதுப் புடவையில் அழகுறுவதை ஓரக் கண்ணுல் ரசிப்பாள். கலாசிரித்துக் கொண்டே துள்ளி ஓடுவாள்

●

''குட்மோர்னிங் சேர்...''- குயிலின் குரலென ஒலித்தது கலாவின் குரல்.

''குட் மோர்னிங்... வாரும்! உமக்காகத்தான்காத்திருக்கிறேன்!''- அட்டகாசமாக வரவேற்றுன் பிரேமகாந்தன்.

''எனக்காகவா... என்ன விசேஷம் சேர்...''

''விசேஷம் கனக்கஇருக்கு... நீர்போய் பெண்கள் பயிற்சி பைலை எடுத்துக் கொண்டு வாரும்...!

துள்ளிக்கொண்டு திரும்பினுள் கலா. துள்ளலை வெகுவாக ரசித்தான் பிரேமகாந்தன்.

சற்று நேரத்தில் பைலுடன் அவள் திரும்பிவந்தாள்.

''கலா, இண்டைக்குப்பயிற்சியின் கடைசிநாள் தெரியும் தானே! நான் இண்டைக்கு அவையின்ரை கூட்டத்திலை பேசப்போறன் ... நீரும் என்னுடன் வாரும்...!''

''நானும் வரவா... ஏன்சேர் நான்...?''

''நீரும் இதையெல்லாம் பார்க்கவேணும். நெடுகலும் பைலுடன் காலத்தைக் கழிக்கக்கூடாது. இப்படி நாலு இடத்துக்குப் போகவேணும். என்ன நடக்கிறதென்றுபார்க்க வேணும். அப்பதான் 'லைப்'- இன்ரறஸ்ராக இருக்கும்''.

கலா சற்று மௌனமாக இருந்தாள்.

''சரி சரி, புறப்படும்... நேரமாகிவிட்டுது''

பிரேமகாந்தன் மிகவும் அவசரப்பட்டான். சற்றுயோசித்த கலா, எங்கே தான்மறுத்தால் அவன் கோபிப்பானே என்று பயந்தாள். ஆனுல் அவளது கணநேரத் தயக்கம் மறு விநாடி காற்றில் கலந்தது. பிரேமகாந்தனை நிமிர்ந்து பார்த்துவிட்டு அறையைவிட்டு வெளியேறினுள்.

அவள் படியை விட்டுக்கீழே இறங்கிக் கன்ரீன் பக்கம் வர பிரேமகாந்தன் தனதுகாரைத் திருப்பிக்கொண்டுவந்து மெதுவாக நிறுத்தி முன்கதவைத் திறந்துவிட்டான், கலா ஏறியவுடன் கார் நகர்ந்தது.

கோபாலு மெதுவாகஎழுந்து போய் யன்னலுக்கு ஊடாகப் பார்த்துவிட்டு மெல்ல நடந்து வந்து எஸ். ஏக்கு முன் வெகு பவ்வியமாய்க் குனிந்து ஏதோ கூறினுன்.

எஸ். ஏ தனது மூக்குக்கண்ணுடியைக் கழற்றிக் கையில் பிடித்துக் கொண்டு சுற்றுமுற்றும் பார்த்தார்.

எழுந்து ரைபிஸ்ட் பரமசிவத்தின் மேசைக்குச் சென்றுர்

''என்ன பரமசிவம், ஏ. டி காரிலை போறுர். இவ மிஸ் சின்னத்தம்பியும் போருவாம்...''

—பரமசிவத்துக்கு மட்டும் கேட்கக் கூடியதாக அமைந்திருந்தது அவரின் குரல்.

''எங்கேயோ போகினமாக்கும்...''

''இல்லையடாப்பா...நானும் உதிலை முன்னுக்குச்சிலை மாதிரி இருக்கிறன். டி. ஓதான் வெளியிலை போறதெண்டு ஒரு சொல்லு...ஊகூம்...!''

—சூள் கொட்டினுர் எஸ். ஏ.

''எஸ். ஏ, உங்களுக்கென்ன விசரே... டீ. ஓ இப்ப பரமசிவன் கழுத்துப்பாம்பு...! உதுகளைக் கண்டும் காணுமலும் இருக்கிறது நல்லது...''

''ஓ... அதுசரி அவை என்னெண்டாலும் செய்யட்டும்... ஆனுல் பெட்டையின்ரை சீவியம் பழுதாகப்போகுது...!

●

பெண்கள் பயிற்சி முகாம் மிக நன்ருக ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது. பயிற்சிக்கென அறுபது இளம் பெண்கள் தெரிவு செய்யப்பட்டிருந்தனர்.

''பைன் செலக்‌ஷன்''- பிரேமகாந்தன் உதவிஅரசாங்க அதிபரைப பார்த்துக் கூறினுன்.

பிரேமகாந்தனும் கலாவும் பெண்கள் அமர்ந்திருந்த பள்ளிக்கூட மண்டபத்தில் நுழைந்ததும் எழுந்து கைதட்டி வரவேற்றனர்.

''இந்தப் பயிற்சி நல்ல பூரணவெற்றி அளித்துள்ளதை உங்கள் ஒவ்வொருவரின் மகிழ்ச்சி பொங்கும் முகங்களையும் பார்த்து நான் தெரிந்துகொண்டேன், நகரத்தில் உள்ள இளம் பெண்களுக்கு எல்லாவசதியும் உண்டு. ஆனுல் அரசு அளிக்கும் இந்த உதவி உங்களையும் நாடவேண்டும் என்ற பேராவலில்தான் இக் கிராமத்தை நாங்கள் தெரிவு செய்தோம்.

''பெண்கள் வீட்டுக்குள் முடங்கிக் கிடக்கக்கூடாது. உலகம் என்ன மாதிரி என்று பூரணமாக அறிந்துகொள்ள வேண்டும். நீங்கள் பாரதி கூறிய புதுமைப் பெண்களாக மிளிரவேண்டும். இந்த ஒரு மாதப் பயிற்சி உங்கள் ஊக்கத்தை அதிகரிக்கும்...''

இப்படிப் பிரேமகாந்தன் பேசினுன். அவன் பேசுவதைத் திறந்த வாய் மூடாது எல்லோரும் ஆவலுடன் கேட்டுக் கொண்டிருந்தனர்.

கூட்டம் முடிந்து பிரேமகாந்தன் புறப்பட அவசரப்பட்டான்.

''சேர், சாப்பாடு எல்லாம் ஒழுங்கு செய்துள்ளேன்! சாப்பிட்டு விட்டுப்போகலாம்''

—உதவி அரசாங்க அதிபர் வற்புறுத்தினுர். ''தயவுசெய்து என்னை மன்னிக்க வேண்டும் ஏ ஜி ஏ. கந்தோரில் அவசரமான அலுவல் இருக்கு...... இண்டைக்கு அதை எப்படியாவது செய்து முடிக்க வேணும்...... அடுத்த புருேகிரும நடக்கும்போது சாப்பிடுகிறேன்......''

ஏ. ஜி ஏ.யைச் சமாதானப் படுத்திவிட்டுப் பிரேமகாந்தன் காரில் கலாவுடன் புறப்பட்டு விட்டான்.

''ஏன்சேர், அந்த ஏ. ஜி. ஏ. பாவம். சாப்பாட்டையெல்லாம் ஒழுங்கு செய்து போட்டார்...... நீங்கள் சாப்பிட்டு விட்டு வந்திருக்கலாமே......''

—வெகு இயல்பாகக்கேட்டாள் கலா.

''கலா, நான் இண்டைக்கு உமக்கு ஒரு விருந்து தரப் போறன்! அதுதான் அங்கை சாப்பிட மறுத்தனுன்''.

''விருந்தா... என்ன விசேஷம்...''

அவன்முகத்தைக் கலா எதிர் நோக்கினுள்.

''இப்ப சொல்லமாட்டன்! எல்லாம் நாம் சாப்பிடப் போகும் இடத்திலை சொல்லுறன்...''—சிரித்தபடி காரை ஓட்டினுன் அவன்.

●

நகரத்தின் சந்தடியினின்றும் விடுபட்டு ஓர் ஒதுக்குப்புறமாகக் கடற்கரையை அடுத்து அமைந்திருந்த அந்த விடுதி மிகவும்அமைதியாய் இருந்தது.

பிரேமகாந்தனின் கார் விடுதியின் முன்வாசலை அடைந்தது.

''இறங்கும் கலா...—சிரித்தபடியே பிரேமகாந்தன் கூறினுன்.

''எனக்கு விருந்து இங்கு தானு...?'

''இங்கேயேதான்...... வாரும்...''

ஒரே பிரமிப்பாய் இருந்தது கலாவுக்கு மௌனமாக அவனைப் பின்தொடர்ந்தாள். சாடிகளில் மலர்ந்திருந்த போகன் வில்லாச் செடிகள் பலவித வர்ணங்களில் கண்ணைச்சிமிட்டின.

பிரேமகாந்தனைக் கண்டதும் விடுதி உரிமையாளர் ஓடிவந்தார். 'மோர்னிங்சேர்......

(10ம் பக்கம் பார்க்க)


பவர்ஸ் உரம்

இணையற்றது

A B C


MASTERS ABC 4/82 (B)

ஏ.பவர் அன்ட் கம்பனி லிமிட்டெட்

த. பெ. 11, கொழும்பு - 1. தொலைபேசி: 20551-6


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எமது சிறுகதை




"ஏ மனிதா!
பகலிலே விளக்கேந்திக் கொண்டு
நீ என்ன
மனிதனைத் தேடுவது
படைத்த இறைவனே
பகலவ விளக்கேந்தி
தினம் தினம்
தேடுவதும்
மனிதனைத்தானே"

அவன் அந்தக் கவிதையைப் படித்தபோது கரகோஷம் கல்லூரிமண்டபத்தை இரண்டாக்கியது. தமிழ் வாத்தியார் பண்டிதர் முருகேசு மூக்கில் விரலை வைத்தார். அன்று கல்லூரியில் முத்தமிழ் விழா அதில் ஒன்பதாம் வகுப்பு மாணவன் கதிர்மகன் வாசித்த கவிதைதான் அது. பெயரில் ஒளிவீசும் கதிர் அவன் கண்களில் வீசத்தவறியது ஏனோ. மண்டபத்தில் யார் இருக்கின்றார்கள்; மண்டபம் எப்படி அலங்கரிக்கப்பட்டிருக்கின்றது? இவற்றையெல்லாம் அவனால் அறியமுடியாது கரகோஷத்தின் இரைச்சலைக்கொண்டு நிறைய ஆட்கள் என்பதை மட்டும் உணர முடியும்.

வெள்ளைக் கால்சட்டை, வெள்ளைமேலங்கி வலதுகையில் வெள்ளைப் பிரம்பு, இடது கையில் பெரிய புத்தகப்பறி. ஒரு பெரியபலகை.—இதுதான் கதிர்மகன். கண்விழிகள் இருக்க வேண்டிய இடத்தில் இரு வெண்மாபிள்கள். பிறந்ததிலிருந்து கிணற்றுத் தவளையாய் வீட்டுமூலைக்குள் முடங்கி ஏழு வயதில் யார்செய்த புண்ணியமோ விழிப்புலனற்றோர் கல்லூரியில் சேர்ந்து, இன்று சமுதாயத்தில் 'நானும் ஒருவன்' என்று முன்னேறி விட்டவன். என்னதான் தாழ்வு மனப்பான்மை இல்லாதபோதும் கணிதபாட வேளையிலும் சமூகக்கலைப் பாடவேளையிலும் 'நான்பார்வையற்றவன்' என்ற எண்ணம் அவனை வாட்டும். இலங்கைப்படத்தில் மீன்விளையும் இடங்கள் என ஆசிரியர் கூறும்போது 'என் தாய்நாட்டைப் பார்ப்பதற்காவது ஒரேயொரு தடவை எனக்குப் பார்வைதாரும் ஆண்டவரே' என இறைஞ்சும் அவன் மனம். புலன்கள் செயலிழந்துபோனால் மனமும் செயலிழப்பதா? என்ன அறியாமை. யாழ். நகரில் பிரபல ஆண்கள் கல்லூரியிலும் அவனை அனுமதிக்கச் செய்ததும் விழிப் புலனற்றோர் கழகத்தின் கைங்கரியம்தான். பாடக்குறிப்புகளைக்கூட குற்றிக் குற்றி எழுதுவான்; பழைய காகிதக் கட்டு, சிறிய கூர் ஆயுதம், இரண்டும் முக்கிய மானவை. குற்றிக்குற்றி எழுதும்போது ஏற்படும் மேடுபள்ளங்களைக் கையினால் தடவி வாசித்து, விளங்கிக்கொள்வான். ராஜ பார்வைகளுக்கு ராஜ மொழிகள். தங்கள் மொழியில் தடடச்சு யந்திரம் இருப்பதை அவன் அறிவான். ஆனால் அதன் விலையோ...! குற்றி எழுதுகையில் கைவலிக்கும்தான். என் செய்வது. "கடவுளே! கண்ணைப் பறித்தாய்; இல்லை, இவலை—தரவே இல்லை! கை விரல்களையாவது ஒன்றும் செய்துவிடாதே"—இது கதிர்மகனின் தினப் பிரார்த்தனை. கையிலுள்ள வெள்ளைப் பிரம்பு வழிகாட்ட, பிறர் துணையின்றித் தன் அலுவல்களைத் தானே பார்த்துக்கொள்வான் கதிர்மகன்.

"கதிர் இந்தா, இந்தப் பிள்ளையைக் கொஞ்சம் பராக் காட்டு." இது சித்தியின் கடுகடுப்பானதா அன்பானதா என இனம் காணமுடியாத குரல். "இல்லைசித்தி, வந்து... நா...நாளைக்கு தவணைப்... பரீட்சை வந்து... அதுக்கு..." —தடுமாறினான் அவன். "ஆமா, உன் கண்கெட்ட கேட்டுக்கு ஒருபடிப்பு! அதுக்கு மேலே ஒருபரீட்சைவேறையா? அதுகள் எல்லாம் கண்ணுள்ளதுகள்அப்பா. அதுகளோடை நீ போட்டிபோடமுடியுமா பேசாமல் பிள்ளையை அழாமல்பார்" —பிள்ளையை வாங்கிக்கொள்கின்றான் அவன். காகிதக்கட்டை நீட்டினாள். "அம்மா" ' அலறினான் பாஸ்கரன். "அம்மா நீ இவ்வள்வு கொடுமைக்காரியா? பேசேவலம் என்னதான் தப்பாயிருந்தாலும் 'கண் தெரியாதவனுக்கு உதவிசெய்' என்றுதான் படிச்சிருக்கேன். ஆனால் நீ கண்தெரியாதவையளை துன்புறுத்து, சித்திரவதை செய் அப்படியா படிச்சிருக்கே சொல்லம்மா"-இது சித்தியின் காதுகளுக்கு பட்டதோ இல்லையோ 'சமுதாயமே! ஏன் எங்களைப் புரிந்துகொள்ள மறுக்கிறாய். கண் இல்லாட்டில் மற்றப் பிள்ளைகளோடை போட்டி போடும் திறமையும் இல்லையென்று அர்த்தமா? கண்மட்டும் ஊனமென்றால் மற்றைய புலன்களுக்கென்ன. மனத்தையும் ஆண்டவன் குருடாய் படைச்சிருந்தா 'சமுதாயச் சாக்கடை ஈக்களின்' இரைச்சலில் இருந்து தப்பலாம். ஆனா எது சொன்னாலும் நெஞ்சத்து முட்களாக வதைக்கின்றதே' மனம் பலவாறு எண்ணி ஓலமிட்டது. சித்தியின் குணாதிசயங்கள் எல்லாம நாளடைவில் பழக்கப்பட்டவைதான். அம்மாவின் அன்பே அறியாத நிலை கதிரைக் காரணம்காட்டி தனக்கு ஒரு மறுதுணைதேடிக் கொண்ட சித்திதான் ச...ன அப்பா சித்தியின் மகன் பாஸ்கரன் இவனதுவகுப்பில் ஆனால் இரு வயதுகள் இளையவன். ஒரு சிறு குழந்தை. இதுதான் அவனது சூழ்நிலை. சித்திக்குப் பிறந்த பாஸ்கரன் குறை என்பது தெரியாதவன். வார்த்தைகளால் கதிர்மகனைச் சித்திரவதை செய்வது. தாயிடம் கோள்சொல்லி அடிவேண்டிக் கொடுப்பது அவனது விருப்பமான பொழுதுபோக்கு. இது கதிர்மகன் அறியாதது அல்ல. என்ன செய்வது தனித்து நின்று தட்டிக் கேட்கும் நிலையில் அவன் இல்லையே. பிறரை ஏதோ ஒரு காரணத்திற்காக அண்டி வாழும் நிர்ப்பந்த சார்பு உள்ளவன் அல்லவா அவன். வெண் மாபிளான அவனது விழிகளைப் பார்த்த குழந்தை பயத்தினால் வீரிட்டு அலறுகிறது. இதனைப் புரிந்து கொள்ளமுடியாத சித்தி 'குருட்டு மூதேவி, குழந்தையைக் கிள்ளிவிட்டு ஒன்றும் தெரியாத மாதிரி இருக்கிறியே கண்தான் குருடென்றால் புத்தியுமே மங்கிப்போச்சு' திட்டித் தீர்த்ததுடன் நில்லாது மூலையில் அவனருகில் பெரிய கட்டாக கிடந்த அவனது காகிதக் கட்டுகளையும் எங்கோ தூக்கிச்சென்றான். "அம்மா! அம்மா பாவமம்மா கதிர். பள்ளிக்கூடத்திலை கை வலிக்க வலிக்க கஷ்டப்பட்டு எழுதின நோட்ஸ் குடுத்திடம்மா"- என்னதான் கோள் சொன்னாலும் கொடுமைதாங்காது பாஸ்கரன் அலறினான். "நீ சும்மா இரடா இன்றைக்கு இரண்டிலை ஒன்று" -என்றபடி பேய்பிடித்தவன்போல கதிரின் அல்லது அவளது ஐந்துவிரலும் பாஸ்கரின் முதுகைப்பார்த்தன. "சித்திபாசுவைஅடிக்காதீங்க சித்தி. எனக்கு அடியுங்க பாசுவைஅடிக்காதீங்க" இருந்தபடியே கத்தினான் கதிர். சித்தி என்ன நினைத்தாளோ இரண்டு பேரும் எக்கேடும் கெடுங்கடா நாய்களே" என்றபடி தன் அலுவலகத்துக்குள் சென்று விட்டாள்.

"பாசு ரொம்ப வலிக்குதாடா' கேவினான் கதிர் "இல்லையடா அம்மா அடிச்சது எனக்கு வலிக்கவேயில்லை உன்ரைநோட்சு கட்டைநெருப்புக் கொழுத்தினதை நினைக்கத்தானடா நெஞ்சுவலிக்குது கதிர்! அன்றைக்குபாரதி பாடல் படிக்கிறப்போ நெஞ்சு பொறுக்குதில்லையே இந்தநிலை கெட்டமாந்தரை நினைத்து விட்டால்' என்ற வரிகள்தான் எவ்வளவு உண்மையானவை. உனக்கு ஏதாவது கொடுமை செய்திருந்தால் என்னை மன்னிக்கமாட்டியாடா? ஆனால் இனிமேல் உன்னை கண்ணில்லாதவன் என்று யாரும் சொன்னா என்னைக் கூப்பிடு. அவன்ரை கண்ணையே புடுங்கி விடுறன்' - என்றான் பாசு. "ஐயோ பாசு யாருடைய கண்ணுக்கும் தீங்கு நினைக்காதையடா. கண்ணில்லாத எனக்குத்தானடா கண்ணின்ரை அருமைதெரியும். சிலவேளை வாத்தியார் கரும்பலகையிலை எழுதிப்போட்டு போயிடுவார். நீங்க எல்லாரும் என்னஎழுதியிருக்குஎன்பதைத் தெரிஞ்சுகொள்வீங்க. ஏனென்டால் உங்களுக்கு பாக்கிறதுக்கு கண் இருக்கு. ஆனல் நான் யாரைக் கேட்பன், யார் சொல்லுவினம். பேசாமல் இருக்கவேண்டியதுதான்" ஏங்கினான் கதிர் "ஆமாம் நீ சொல்லுறது உண்மைதான். இந்த சமுதாயத்திலே உங்களைப் புரியாமல் சிலர் இருக்கினம் என்றால் சமையலறையே கதியான அம்மா எப்படியடா உன்ரை நிலையை விளங்கிக்கொள்ளுவா? எனக்காக அம்மாவை மன்னிக்கமாட்டியாடா என்று பாசு வேண்டினான்.

பார்வை இல்லாத படியால் தானே கதிரை இப்படி எல்லோரும் வெறுக்கின்றார்கள். அவனுக்கு பார்வை கிடைத்தால் எப்படி இருக்கும் அதற்கு என்ன செய்யலாம் என்று பாசு யோசித்தான் அந்த ஆழமான யோசினையின் காரணமாக 'என்ரை கண்ணிலை ஒன்றை கதிருக்கு குடுத்தா அவனும் பார்க்கலாம்' என்ற எண்ணம் பாசுவை அலைக்கழித்தது. தனது நண்பனின் தந்தையான வைத்தியர் ஒருவரிடம் இதுபற்றிக் கேட்டான். ஆனல் அவர் தகுந்தகாரணங்கள் காட்டி அதனை மறுத்து விட்டார் மறக்கச் சொல்லி விட்டார். இந்தவிடயம் கதிருக்கும் தெரிந்தது. தடுத்துப்பார்த்தான் பயனில்லை கெஞ்சிப் பார்த்தான் பாசு விடவில்லை இந்த நிலையில் "நான் உயிரோடு இருப்பதால்தானே பாசு இந்த முடிவு எடுக்கிறான் நான் இல்லையென்றால்...." அந்தத் தீர்க்கமான முடிவு கதிரின் மனதுக்கு நிம்மதி தந்தது ஆனல் வாழ்க்கைக்குப் பயந்து தற்கொலை செய்வது பார்வையற்றோர்சமுதாயத்தின் கையாலாகாத் தனம் ஆச்சே. என்றாலும் பாசுவின்ரை நல்வாழ்வுதான் இப்ப முக்கியம் எனப் பலவாறு எண்ணம் கொண்டான். இதே நிலையில் 'நான் உயிரோடு இருக்கிறதாலை கதிருக்கு கண்பார்வை கிடைக்காது. ஆனபடியா அது தான் நல்லது'. பாசுவும் முடிவெடுத்தான்.

மறுநாட்காலை இருவரும் பாடசாலை வருகின்றனர். வீதியில் பெரிய விறகுலொறி பேரிரைச்சலுடன் வந்ததருணம் பார்த்த பாசு குறுக்கே பாய கதிர் 'டேய் டேய் எங்கேயோ குறுக்கே ஓடுறாய்போல லொறியும் இரையுது' என்றபடி கையைப்பிடித்து இழுக்க அந்த விநாடியில் எல்லாமே முடிந்து விட்டன. பாரலொறி இருவரது பிரச்சினையும் தீர்த்து விட்டது.

மறுநாட்காலை வழக்கமான விசாரணைகள். கடமைகள், நடைபெற்றபின் மேளத்தின் அமக்கல ஒலிகள் சிலரின் உண்மைக்கதறல்கள் சிலரின் ஒப்புதல் ஓலங்கள் இவற்றுடன் இருவரும் சேர்ந்து இறுதியாத்திரை மேற்கொண்டு அக்கினிக்கு அர்ப்பணம் ஆயினர். பத்திரிசையில் "லொறிக்கு மோதுண்ட இரு சிறுவர் கோர மரணம்" -தலைப்பில விபத்து மரணம் எனத் தீர்ப்பு வெளியாகியிருந்தது. ஆனல் அந்த ஆத்மாக்கள் தங்கள் கூண்டை விட்டுப் பிரிந்ததன் தூயநோக்

(10-ம் பக்கம் பார்க்க)

## நீதிநூற் கொத்து வெளியீடு



மில்க்வைற் வெளியீடாக வெளிவந்த நீதிநூற் கொத்தின் பிரதிகள் யாவும் விநியோகமான பின், வளர்ந்து வரும் சிறார்களின் நாளாந்த தேவை கருதி அத்தொகுப்பின் அடுத்த வெளியீடு அழகாகப் பிரசுரமாகியது. இந்தப்பதிப்பின் முதல் பிரதிகளை இலவசமாகப்பெறும் வாய்ப்பு இராமநாதன் கலலூரி மாணவியர் ஆசிரியைகள் சார்பில், கல்லூரி அதிபர் திருவாட்டி சச்சிதானந்தம் அவர்களுக்கே உரியதாயிற்று சிட்டா சாரத்துறையில் இந்து நாகரிகப் பரம்பலுக்கும் பாதுகாப்பிற்கும் ஔவையாரின் ஆத்திசூடி முதலாய்ன பாரம்பரியமாகப் பயன் தந்து வந்தன என்பது எல்லோரும் நன்கு அறிந்ததே. திருவாட்டி சச்சிதானந்தம் நல்ல முறையில் பிள்ளைகளை உருவாக்கி வரும் வழியில் சேர். இராமநாதன் அவர்களின் நினைவாக இத்தொகுப்பு பெரும் பயன் தருவதாக. நீதி நிலைப்பதாக மில்க்வைற் அதிபர் சிவநெறிக்காவலர் க. கனகராசா அவர்கள் அதிபர் திருவாட்டி சச்சிதானந்தம் அவர்களுக்குப் பிரதிகளை வழங்குகையில் எடுத்தபடம்.

## குட்டியாண்டவன்

முட்டாள்கள் இருவர், தெய்வத்தைக்காண வேண்டுமென்று ஏதோ ஒரு கோவிலுக்குப் போனார்கள். அங்கே தெய்வப் பதுமையைப் பார்த்து, ஒருவன் மற்றவனிடம், "தம்பி, வெறும் கல் அல்லவா இது? இதையா எல்லாரும் தெய்வம் என்கிறார்கள்?" என்றான். இது கோவிற் பணியாளர்களின் காதில் விழுந்தது. தெய்வத்தைக் கல் என்று இகழ்ந்ததற்காக அவனை நையப் புடைத்து வெளியே துரத்தினார்கள். சில நாள் கழித்து அவர்கள் இருவரும் ஒரு நண்பனின் வீட்டில் விருந்துண்ணச்சென்றனர் சோறறில் சிறு கல்லைக் கண்ட இரண்டாமவன் முதல்வனிடம், என்ன சோறப்பா இது! ஒரே கல்லாக இருக்கிறதே!' என்றான். முன்னே அடிபட்ட முதல்வன் தன் துணைவனைப் பளாரென்று அறைந்து, "டே முட்டாள்! கல் என்று சொல்லி ஆண்டவனைப் பழிக்கிறாயேடா பாவி! இப்படிச் சொல்லி முன்பு நான் அடிபட்டதைமறந்து போனாயா? சோற்றில் குட்டியாண்டவன் இருக்கிறான் என்று சொல்லுடா!" என்றான்.

அனுப்பியவர்;

— சச்சி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அமெரிக்காவில் எம். ஜி. ஆர்

## தமிழகத்தில் கலைஞர்

# தமிழ்நாடு யாருக்கு?

அகில இந்திய அரசியலில் 'தமிழகம்' அன்றுதொட்டு இன்றுவரை ஒரு முக்கிய இடத்தைப்பெறுகிறது தமிழகத்திலிருந்தே மத்திய மந்திரிகள் பலர் தெரிவுசெய்யப்பட்டார்கள். சத்தியமூர்த்தி, ஓ. வி. அழகேசன், கிருஷ்ணமாச்சாரியார், காமராஜர், ராஜாஜி சி. சுப்பிரமணியம் என்போர் ஆளும் காங்கிரஸ் கட்சியின் முக்கியஸ்தர்களாக விளங்கினார்கள். இன்றைய உதவி ராஷ்டிரபதியே ஒரு தமிழர் என்பதும் குறிப்பிடத்தக்கது. இவரும் தமிழகத்தைச்சேர்ந்தவர்தான். காங்கிரஸ்கட்சியில் நேருவின் மறைவுக்குப்பின் தான் இறக்கும்வரை ''கிங் மேக்க''ராக விளங்கிய காமராசர் அகில இந்திய அரசியல் வானில் முழுமதியாகப்பிரகாசித்தார்.

தமிழ்நாட்டின் முதல்மந்திரிகளாக குமாரசாமி ராஜா, ராஜாஜி, காமராசர், பக்தவத்சலம், அண்ணாதுரை, கருணாநிதி, எம். ஜி. ஆர். என்போர் விளங்கினர்.

### அண்ணா

### அசைத்தார்

1967வரை தமிழ்நாட்டில் காங்கிரஸை அசைக்க எவராலும் முடியவில்லை. அகில இந்தியக்கட்சியான தேசியக்கட்சியான காங்கிரஸ் மாநிலக்கட்சியான தி. மு. க. விடம் தோற்றது.

அண்ணாவின் கை அசைத்தால் நாடே அசையும் என்றளவுக்கு அண்ணாவுக்குத் தமிழக மக்களிடையே செல்வாக்கிருந்தது 1967லிருந்து இன்றுவரை தி மு.க. ஆட்சி என்ருலென்ன அ தி. மு. க ஆட்சி என்ருலென்ன அண்ணாவின் பெயரைச்சொல்லியே ஆட்சியை அமைத்தன.

இருபது ஆண்டுகளாக தமிழகத்தை தன்பிடியில் வைத்தி

## 'புத்தொளி

ருந்த காங்கிரஸ் 1967ல் தி மு. காவிடம் தோற்றுப்போனது. அன்று தொட்டு இன்று வரை காங்கிரசால் தமிழக ஆட்சியை மீண்டும் கைப்பற்ற முடியவில்லை.

### தி. மு. க.

1957ல் 15 இடங்களைப் பிடித்த தி. மு க. தோல்வியைக்கண்டு துவண்டுவிடவில்லை. 1962 தேர்தலில் மீண்டும் போட்டியிட்டு 5 எம். எல். ஏக்களுடன் சட்டசபை சென்றது. படிப்படியாக முன்னேறி தன் பிரசாரத்தால் 1967ல் 137 தொகுதிகளில் வெற்றிபெற்று ஆட்சியை அமைத்தார் அறிஞர் அண்ணா. அண்ணாவின் முதல்வர் பதவி அதிககாலத்திற்குஇருக்கவில்லை முதலமைச்சராக 18 மாத காலமே இருந்த அண்ணா அவர்கள் புற்றுநோய் காரணமாக மரணமானுர்.

தமிழக அரசியல் வரலாற்றில் பிராமண ஆதிக்கத்தை அகற்ற சுதந்திரப் போராட்ட காலத்திலேயே ஒரு கட்சி அமைக்கப்பட்டது. பிரிட்டிஷ் ஆட்சியின் கீழ் பிராமண சமூகமே உத்தியோகங்கள் பெற்று வருகிருர்கள். பிராமணரல்லாதாரும் இந்த நோக்கத்தைப் பெறவேண்டும் என்ற எண்ணத்துடன். ஜஸ்டிஸ் கட்சி என்ற பெயரில் ஒருகட்சி தோன்றியது.

1916ல் ஜஸ்டிஸ் கட்சி உதயமாகிப் படிப்படியாக வளர்ச்சி பெற்று பின்னர் தி க. வாகி பெரியாருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் தி. மு. க வாகி இன்று அதிலிருந்து பிரிந்தோர் அ. தி. மு. க.வை அமைத்துள்ளனர்.

### தமிழ்நாடும்

### காங்கிரசும்

தேர்தல்களின் போது தமிழ் நாடு மாநிலம் முதலிடம் வகிக்கின்றது. தென்மாநிலங்களில் தமிழ் நாடு மாநிலத்தில்தான் காங்கிரஸின் செல்வாக்கு வளர்ந்திருந்தது. காங்கிரஸின் செல்வாக்குப்போய் தி. மு. க.; அ தி.மு க. ஆட்சிக்கு வந்தபோதும் இக்கட்சிகளுடன் கூட்டணி அமைத்த காங்கிரஸ் மத்தியில் இவர்களின் உதவியைப்பெற்று ஸ்திரம் பெற்றது. 1980 தேர்தலில் தி. மு. க வுடன் கூட்டுச்சேர்ந்த இந்திரா காங்கிரஸ் தி மு.க. வுக்கு உபசபாநாயகர் பதவியையே கொடுத்த தென்ருல் தமிழ் நாட்டின்முதன்மை தெற்றெனத் தெரிகிறது. 1977ல் அ. தி. மு. க. வுடன் கூட்டுச்சேர்ந்தது அதிக லோக சபை ஸ்தானங்களைப் பெற்றது 1984 தேர்தலிலும் அ தி மு க. வுடன் கூட்டுச் சேர்த்து இந்திரா காங்கிரஸ் 39 லோக சபை ஸ்தானங்களில் 12 இடங்களில் போட்டியிடுகின்றது.

1916ல் ஆரம்பிக்கப்பட்ட ஜஸ்டிஸ்கட்சி பின்னர் தி. க. வாக மாறி பெரியாரின் உணர்வுகளுடன் இன்றும் தமிழ்நாட்டில் தலை எழுத்தை நிர்ணயிக்கும் கட்சியாக மாறிவிட்டது.

1939ல் தமிழ்நாட்டில்ஆட்சி அமைத்து முதலமைச்சரான ராஜாஜி இந்தி தான் ஆட்சி மொழி என்ருர். அப்படிச் சொன்னவர் பின்னர் தன் பேச்சைமாற்றி 1967ல்காங்கிரசுக்குஎதிராக தி. மு க.வுடன் தேர்தல் பிரசாரமும் செய்தார். அண்ணா காலத்தில் தி. மு. க. வின் செல்வாக்கு 1967ற்குப்பின் இமயமாக வளர்ந்து இன்றுவரை தி மு. க, அ. தி. மு. க. வாகப் படர்ந்து ஒரே ஒரு கட்சிதான் தமிழகத்தை ஆளமுடியும் என்ற நிலைக்கு உயர்ந்துவிட்டது.

தி. மு. க. வை ஆரம்பித்த ஐந்து தலைவர்களில் இன்று உயிருடன் இருப்பவர் இரா நெடுஞ்செழியன் ஒருவர்தான். இரா நெடுஞ்செழியன் அ தி. மு. க பொதுச் செயலாளராகி இன்று நிதி அமைச்சராக இருக்கிருர்.

### எம். ஜி. ஆர்.

அ. தி. மு. க தலைவர் எம். ஜி. ஆர். தி மு. க. வின் பொருளாளராக இருந்தவர். தி. மு க. விலிருந்த போதும் சரி அ தி.மு.க. வை அமைத்தபோதும் சரி, தமிழக முதல்வரான போதும் சரி எதுவித போராட்டங்களிலும் ஈடுபடாதவர். சிறை அறியார். ஆனல் சிறை சென்ற தியாகி என்ற பெயரைக்காட்டிலும் சினிமாவில் நடித்தன் மூலம் மக்கள் திலமாக விளங்குகின்ருர். தி.மு.க. தலைவர்களின் பேச்சைக்கேட்க மக்கள் திரள் திரளாக வருவார்கள். அதே போல் எம். ஜி ஆரைப்பார்க்க ஆண்பெண் குழந்தை குட்டி என்று குவிந்து விடுகிருர்கள். இரு தடவைகள் தமிழகமக்கள் ஆட்சிப்பொறுப்பையும கையளித்தார்கள்.

(8 ம் பக்கம் பார்க்க)


## வட்டி விகிதங்கள், உறுதிப்பாடு, பாதுகாப்பு என்பன உங்களுக்கு முக்கியமென்ருல்... நீங்கள் நாட வேண்டியது மகாராஜா இன்வெஸ்ட்மென்ஸ்

சிந்திக்கவே தேவையில்லை. உங்கள் பணத்திற்கு 30 சதவித வட்டி தாமதமின்றி வழங்கப்படும். 100 சதவீதம் நம்பத்தகுந்த உறுதிப்பாடும் பாதுகாப்பும் கிடைப்பதால் நீங்கள் கவலைப்படவே தேவையில்லை. உங்கள் பணத்தைக் கொண்டு நீங்கள் செய்யக்கூடிய மிகச் சிறந்த வேலை இதுதான்.

உங்கள் முதலீட்டுக்கு மகாராஜா நிறுவனத்தின் கூட்டமைப்புஅந்தஸ்தும் நிதி வலிமையும் தொடர்ச்சியான வளர்ச்சி வேகமும் பக்கபலமாக இருப்பதால் எவ்வித சந்தேகமும் இன்றி நீங்கள் முடிவு செய்யலாம்

இன்றே மகாராஜா இன்வெஸ்ட்மென்ஸ் நிறுவனத்தில் முதலீடு செய்யுங்கள்.

வட்டி வீதங்கள் (வருடாந்தம்) ☆

| | ரூபா 500 முதல் ரூபா 99,999 வரையான வைப்புகள் | | ரூபா 100,000ம் அதற்கு மேலும் | |
|---|---|---|---|---|
| காலம் | மாதாந்தம் | முதிர்வில் | மாதாந்தம் | முதிர்வில் |
| 36 மாதம் | — | 30% | — | 30% |
| 30 மாதம் | — | 27% | — | 28% |
| 24 மாதம் | 22% | 26% | 23% | 27% |
| 18 மாதம் | 21% | 24% | 22% | 25% |
| 12 மாதம் | 20% | 23% | 21% | 24% |
| 6 மாதம் | — | 20% | — | 21% |
| 3 மாதம் | — | 19% | — | 19% |

* வட்டி வீதங்கள் மாற்றத்திற்குரியன, வைப்புக்காலத்தில் நடைமுறையிலிருக்கும் வட்டி வீதமே வழங்கப்படும்.

**பிரதான வியாபாரத் துறைகள்**

நிலையான வைப்புச் சேகரித்தல், குத்தகை, கைத்தொழில் போன்ற வேறு துறைகளுக்கான இயந்திர. மூலப்பொருள் இறக்குமதிக் கடன்வசதி, பெயர் பெற்ற தரமான பொருட்கள் இறக்குமதி, ஈடு, அடமானக் கடன், வர்த்தக வாகனங்களுக்குக் கடன் வழங்கல், காப்புறுதி முகவர்.

**பணிப்பாளர் சபை**

திரு. ஆர். மகாராஜா, முகாமைப் பணிப்பாளர்

திரு. ஆர். இராஜ மகேந்திரன், முகாமைப் பணிப்பாளர்.

திரு. வி. என். குமாரசுவாமி, FCA (ENG & WALES), ATII (ENG.) MINST A M. (ENG ) AMBIM (ENG ) FCA (CEY.)

திரு. பி மகிந்தா B Sc. (Hons ) FBIM (ENG.)

திரு. டபிள்யூ. பஸ்நாயக்க, MBIM (ENG.) நிர்வாகப் பணிப்பாளர்.

திரு. சி. சிறீ நம்முனி, MBIM (ENG ) ACMA

சுருக்கப் பேறுகள்

| | 1980/81 ரூபா | 1981/82 ரூபா | 1982/83 ரூபா |
|---|---|---|---|
| பங்கு மூலதனம் | 750,000 | 1.585.900 | 2.585.900 |
| ஒதுக்கம் | 2.835.255 | 11.175.062 | 13.701.040 |
| மொத்தப் பங்குதாரர் நிதி | 3,585,255 | 12.760.962 | 16.286.940 |
| வைப்புகள் ** | 66,938.481 | 78.102.511 | 113.732.001 |
| வங்கி இருப்பு | 8,973.105 | 12.812.856 | 16.291.978 |
| பொறுப்புகள் | 5.139.382 | 1.513.556 | 7.344.829 |
| வைப்பாளர்களுக்கு வட்டி வழங்குமுன் இலாபம் | 13.779.850 | 18.691.833 | 25,343.400 |
| வரியிறுக்குமுன் இலாபம் | 1.946.188 | 2.454.490 | 3.634.085 |
| வரியிறுத்தபின் இலாபம் | 1.629.687 | 1.084.490 | 2.689.045 |
| பங்கிலாபம் | 187,500 | | |

** 1983 டிசம்பர் 31ம் திகதி வரை வைப்புக்கள் 14.5 கோடி ரூபாய்களுக்கு மேல்...

**உங்கள் பணத்தைப் பயன்படுத்த சிறந்த வழி வேறில்லை**

**மகாராஜா இன்வெஸ்ட்மென்ஸ் லிமிட்டெட்**

கூட்டிணைப்பு: 23—9—1976.

தொழில் முகவரி: 347, யூனியன் பிளேஸ், கொழும்பு-2. தொலைபேசி: 34133—29747.

பதிவு அலுவலகம்: இலங்கைச் செயலகச் சேவைகள் நிறுவனம், 64, கெய்சர் வீதி, கொழும்பு-11.

கிளை அலுவலகங்கள்: 122, கே. கே. எஸ். வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 021—24267.
78, கிங்ஸ் வீதி, கண்டி, தொலைபேசி: 08—25670

'Grant K & E 5574


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சாள்ஸ் டிக்கின்ஸின்

# ஒலிவர் ருவிஸ்ற்

தமிழில்: 'பேனு'

அடுத்தநாள் ஒலிவர் எழுந்திருந்தபோது வெகுநேரமாகிவிட்டது. அறையில் யூதக்கிழவன் பேஜினைத் தவிர வேறு யாரும் இருக்கவில்லை காலை உணவுடன் குடிப்பதற்காக கோப்பி தயாரித்துக்கொண்டிருந்த அவன் மெதுவாக தனக்குள்ளே விசில் அடித்துக்கொண்டிருந்தான் உறக்கத்திலிருந்து விழித்துக்கொண்டாலும் முற்றுக ஒலிவருக்கு உறக்கம் கலையவில்லை கண்களைக் கொஞ்சமாகத் திறந்து யூதனைக் கவனித்தான் ஒலிவர்.

கோப்பி தயாரித்து முடிந்ததும் சற்று தயங்கி நின்ற பேஜின் திரும்பி ஒருகணம் ஒலிவரைப் பார்த்தான், பிறகு பெயர் சொல்லி அழைத்தான. பதில் சொல்லாமல் நித்திரையிலிருப்பது போல் கிடந்தான் ஒலிவர் யூதன் மெதுவாக முன்னே சென்று கதவைத் தாழிட்டான் பின்னர் தளத்தின் அடியில் ஒரு துவாரத்தில் ஒளித்து வைத்திருந்த சிறு பெட்டியொன்றை வெளியில் எடுத்து கவனமாக மேசை மீது வைத்தான் அதைத் திறந்தபோது யூதனின் கண்கள் பளிச்சென்று பிரகாசித்தன. பழைய கதிரையொன்றை மேசையருகில் இழுத்துப்போட்டு அமர்ந்துகொண்டு அப்பெட்டியிலிருந்து இரத்தினங்கள் ஜொலிக்கும் தங்கக் கடிகாரம் ஒன்றை வெளியில் எடுத்தான்.

''ஆ'' என தனக்குள் அசிங்கமாகச் சிரித்துக்கொண்ட யூதன் ''கெட்டிக்கார நாய்கள் — நன்றியுள்ளதுகள் ஒருபோதும் பேஜினைக் காட்டிக் கொடுக்க மாட்டார்கள் — காட்டிக் கொடுத்தாற்போல தூக்கில் தொங்குவதிலிருந்து தப்பிவிட முடியுமா! இல்லை, இல்லை — நல்ல பயல்கள், நல்ல பயல்கள்'' இவ்வாறு பேசிக்கொண்டே கடிகாரத்தை அதன் பத்திரமான இடத்தில் வைத்தான் இதுபோல் வேறு பல பொருட்கள், திறமான வேலைப்பாடுகளுடன் கூடிய மோதிரங்கள், பதக்கங்கள், மற்றும் ஆபரணங்களையும் எடுத்து மகிழ்ச்சியோடு ஆராய்ந்து பார்த்துவிட்டு வைத்தான் அதே சமயம் கிழவனின் கழுகுப்பார்வை ஒலிவர் பக்கமாகத் திரும்பியது ஒலிவர் மௌனமாகவே யூதனின் செய்கைகளை ஆர்வத்துடன் குத்திட்டுப் பார்த்துக்கொண்டிருந்தான் ஒலிவர் தன்னை அவதானித்துவிட்டான் என்று உணர்ந்தவுடன் பேஜின் அந்தப் பெட்டியை பலதத சத்தத்துடன அடித்து மூடிவிட்டு மேசைமீது கிடந்த ஒரெட்டி வெட்டும் கத்தியைக் கையில் எடுத்தான்.

''என்ன செய்கிருய், என்னை ஏன் அவதானிக்கிருய்? ஏன் விழித்துக்கொண்டிருந்தாய்? என்ன பார்த்தாய்? பேசடா பயலே; கெதியாய் உன் உயிரைக் காப்பாற்றிக்கொள்வதானுல் உடனே பேசு'' என்று கத்திஞன் பேஜின்.

மேற்கொண்டும் உறங்க முடியவில்லை ஐயா'' என்று கூறிய ஒலிவர் ''உங்களைக் குழப்பியிருந்தால் மன்னித்துக்கொள்ளுங்கள்'' என்ருன்.

''அப்போ ஒரு மணி நேரத்துக்கு முன்னுல நீ விழித்துக்கொண்டிருக்கவில்லையா?'' பயங்கரமாகப் பார்த்தபடி கிழவன் கேட்டான்.

''இல்லை. இல்லை உண்மையாகவே இல்லை.''

''நிச்சயமாக!'' முன்னைவிட பயங்கரமாக முகத்தை வைத்துக்கொண்டு கிழவன் கேட்டான்.

''சத்தியமாக ஐயா—நான் விழித்திருக்கவில்லை'' என்ருன் ஒலிவர்.

''சரி பரவாயில்லை தம்பி'' கிழவனின் குரலும் பாவனையும் மாறிவிட்டது. கத்தியைச் சுழற்றி ஏதோ விளையாட்டுக்காக எடுத்ததுபோல் ஒலிவருக்கு பாவனை செய்து மேசைமீது வைத்துவிட்டு ''அது எனக்குத் தெரியும், நான்சும்மா உன்னைவெருட்டிப் பார்த்தேன் — நீ துணிச்சல்காரப் பையன், ஒலிவர் நீ துணிச்சல்காரன்! ஹா ஹா......'' என்று கூறிய பேஜின் கலவரத்துடன் பெட்டியைப் பார்த்தான். சற்றுத் தயங்கிய பின் பெட்டியின் மீது கையை வைத்தபடி இதிலுள்ள அழகான பொருள் எதையும் கண்டாயா?'' என்று கேட்டான்



''ஆம் ஐயா'' பதில் வந்தது.

''ஆம் அவையெல்லாம் என்னுடையவை ஒலிவர், எனது சிறிய சொத்து. எனக்கு முடியாத காலம் வரும்போது இதைக்கொண்டுதான் வாழவேண்டும், சனங்கள் என்னைக் கஞ்சன் என்கிருர்கள்...... ம்..... கஞ்சன் எனகிருர்கள் அவ்வளவுதான்.''

இத்தனை அழகான தங்கக் கடிகாரங்களையும் வைத்துக்கொண்டு இப்படி அசுத்தமான ஓர் இடத்தில் வாழ்வதைப் பார்த்தால் கஞ்சனுகவே இருப்பது என்று தீர்மானித்துக்கொண்டு கிழவன் வாழ்கிருன்போலிருக்கிறது என்று ஒலிவர் நினைத்துக்கொண்டான்.

தான் எழுந்திருக்கலாமா என்று ஒலிவர் பேஜினிடம் வினவினுன்.

''ஆகா பேஷாக, கொஞ்சம் பொறு, அந்தக் கதவுக்கருகில் ஒரு பாத்திரத்தில் நீர் இருக்கிறது எடுத்துவா. நான் ஒரு பேசின் தருகிறேன் நீ அதில் கழுவிக்கொள்ளலாம்'' என கிழவன் பதில் சொன்ஞன்.

ஒலிவர் எழுந்து அறையின் குறுக்கே நடந்து பாத்திரத்தைத் தூக்குவதற்கு ஒரு கணம் குனிந்தான், பின் அவன் திரும்பிப் பார்த்தபோது அந்தப் பெட்டி இருந்த இடம் தெரியாமல் மறைந்துவிட்டது.

முகம் கழுவிக்கொண்டிருக்கும்போதே ஸ்டாக்கின்ஸ் தனது நண்பன் ஒருவனுடன் திரும்பி வந்தான். இந்த நண்பனின் பெயர் சார்லி பேட்ஸ் என்று ஒலிவருக்கு அறிமுகப் படுத்தப்பட்டது. இவனை ஏற்கனவே முதல் நாள் இரவு அங்கு புகைபிடித்துக்கொண்டிருந்தவர்களுடன ஒலிவர் பார்த்திருக்கிருன்.

காலை உணவு சாப்பிட ஆரம்பித்தார்கள் கோப்பியுடன் பரிமாறப்பட்ட சூடான இறைச்சிச் சுருள்களை ஸ்டாக்கின்ஸ் தனது தொப்பிக்குள் வைத்துக்கொண்டு வந்திருந்தான்.

ஒலிவரை ஒரக்கண்ணுல் பார்த்தபடி ''இன்று காலையிலேயே வேலையைத் தொடங்கிவிட்டீர்கள்போலிருக்கிறது'' என்று ஸ்டாக்கின்ஸிடம் வினவினுன் பேஜின் ''என்ன கொண்டு வந்திருக்கிருய்'' என்றும் அவனிடம் கேட்டான்.

''ஒரு சோடி பாக்கட் புத்தகங்கள்'' என்ருன் ஸ்டாக்கின்ஸ்

''நீ, சார்லிபேட்ஸ்?''

''கைக்குட்டைகள்'' என்று கூறி நான்கு கைக்குட்டைகளை முன்னுல் வைத்தான் சார்லி. அவைகளை எடுத்துக் கவனமாகப் பார்வையிட்ட யூதன், ''எல்லாம் நன்ருய்தான் இருக்கிறது. ஆனுல் அதில் அடையாளங்களைத்தான் நீ சரியாக இடவில்லை. அதை எப்படி செய்வது என்று ஒலிவருக்குச் சொல்லிக்கொடுப்பாய்! என்ன சொல்கிருய் ஒலிவர்!'' என்று கேட்டுவிட்டு சிரித்தான் யூதன்,

''நீங்கள் விரும்பினுல் சொல்லிக்கொடுங்கள் ஐயா'' என்ருன் ஒலிவர்.

''சார்லிபேட்ஸ் போலவே மிக எளிதாக பாக்கட் கைக்குட்டைகள் செய்வதில் பயிற்சி பெற விரும்புகிருய் இல்லையா ஒலிவர்.''

''ஆம் ஐயா, நீங்கள் சொல்லிக்கொடுத்தால் செய்கிறேன்'' என்று பதில் சொன்ஞன் ஒலிவர்.

இந்தப் பதிலில் ஏதோ நகைப்புக்குரிய விடயம் இருப்பதுபோல் சார்லிபேட்ஸ் மூச்சடைக்கும்வரை சிரித்தான் — சிரிப்பு அடங்கியதும்

''இவன் ரொம்பவும் பச்சத்தண்ணியாக இருக்கிருன்'' என்ருன்.

காலை உணவு முடிந்தவுடன் அந்த மூஸ்பாத்தியான கிழவனும் மற்ற இரண்டு பையன்களும் சேர்ந்துகொண்டு விசித்திரமான ஒரு விளையாட்டை நடத்திஞர்கள்.

யூதக்கிழவன் தன் கால் சட்டைப் பைகள் ஒன்றில் மூக்குப்பொடி டப்பி ஒன்றை போட்டான், இன்னென்றில் பாக்கட் புத்தகம் ஒன்றை போட்டான்.

## 5

கடிகாரம் ஒன்றைஉட்கோட்டின்பையில் போட்டான்; ஒரு போலி வைரக்கல் பதித்த பின்னை சட்டையில் அணிந்துகொண்டான. பின்னர் மேல் கோட்டை இறுக்கமாகப் போட்டுக்கொண்டு ஒருதடியை ஊன்றிக் கொண்டு ஒரு வயோதிப மனிதன் வீதியால் நடப்பது போல அந்த அறையில் அங்கும் இங்கும் நடந்தான் சிலசமயம் அடுப்படியிலும் சிலசமயம் கதவடியிலும் நின்று ஏதோ யன்னல் வழியாக கடைச்சாமான்களைப்பார்ப்பது போல நடித்தான். அவ்வாறு நிற்கும் சமயங்களில் சுற்று முற்றும் திருடர்கள் இருக்கிருர்களா என பார்ப்பது போலவும், பொருள் ஏதும் காணுமல் போய்விட்டதா எனப்பார்ப்பதுபோலும் பாசாங்கு செய்துகொண்டான். இதைப்பார்க்க ஒலிவருக்கும் சிரிப்புச் சிரிப்பாய் வந்தது முகத்தில் கண்ணீர் வழியும் வரை அவன் சிரித்தான்.

இதேசமயம் அந்த இரண்டு பையன்களும் (ஸ்டாக்கின்ஸ்-சார்லிபேட்ஸ்)கிழவனுக்கு பின்னுலேயே அவன் கண்களுக்குப் படாமல் சென்று கொண்டிருந்தார்கள் கடைசியாய் ஸ்டாக்கின்ஸ் கிழவனின் பெருவிரலில் தற்செயலாகத் தடுக்கியதுபோல் இடித்தான். அதே சமயம் சார்லிபேட்ஸ் பின்பக்கமாக மோதிக்கொண்டான். அந்த ஒரு கணத்தில் மூக்குப் பொடி டப்பி, பாக்கட் புத்தகம் சட்டைப்பின், கைக்குட்டை, கண்ணுடி உறை ஈருக சகலத்தையும திருடிவிட்டார்கள் இருவம் இப்படிச்செய்யும்போது எவரது கையாவது கிழவனின் உடலில்பட்டதாகத் தெரிந்துவிட்டது என்ருல்மீண்டும் நாடகத்தைஆரம்பித்தார்கள்.

இவ்வாறு யூதக்கிழவன் பேஜினும் அவனது சீடர்களும் பலதடவைகள் மேற்படி நாடகத்தை நடித்துக்கொண்டிருந்த வேளையில் இரு இளம் பெண்கள் ஸ்டாக்கிவ்ஸ்ஸைப் பார்க்க வந்தார்கள். ஊத்தை உடுப்புகளுடன் காணப்பட்டாலும், அவர்களின் நடத்தை பரவாய்இல்லைபோல் ஒலிவருக்குத் தெரிந்தது ஒருத்தி பெயர் பெட், மற்றவள் நான்ஸி வெகுநேரம்வரை மதுபானங்களை அருந்தியபடியும் வேடிக்கை விஞேதங்களுடன் பேசி மகிழ்ந்தபடியும் இருந்த அவர்கள்சார்லிபேட்ஸ், ஸ்டாக்கின்ஸ் இருவரும் உடன்வர வெளியேறிச் சென்றனர் அவர்களுக்குசெலவுக்கு வேண்டிய பணத்தை பேஜின் கொடுத்தனுப்பினுன்

அவர்கள் போனதின்பின் ''பார்த்தாயா ஒலிவர், எவ்வளவு மகிழ்ச்சியான வாழ்க்கை'' என்று பேஜின் ஒலிவரிடம் கூறினுன.

''இந்த இளம் கனவான்களை முன் மாதிரியாக வைத்துக்கொள் குறிப்பாக ஸ்டாக்கின்ஸ்

இவன் மிகப்பெரிய ஆளாக வரப்போகிருன்— உன்னையும் அப்படியே ஆக்குவான்— அவனைப் பின்பற்று'' என்று கூறிய கிழவன் ''எனது கைக்குட்டை வெளியே தெரிகிறதா ஒலிவர்'' என்று கேட்டான.

''ஆம் ஐயா''

''இன்று காலையில் அவர்கள் செய்ததுபோல நான்உணராத மாதிரிக்கு கைக்குட்டையை எடுத்து விடு பார்க்கலாம்''

டாக்கில்ஸ் செய்தது போல கிழவனின் சட்டைப்பையின் கீழ்ப்பக்கமாக ஒரு கையைக்கொடுத்துத் தாங்கிக்கொண்டு மறுகையால் கைக்குட்டையை மெதுவாக இழுத்தெடுத்தான் ஒலிவர்:

''கைக்குட்டை போய்விட்டதா?'' கிழவன் கேட்டான்.

''இதோ இருக்கிறது'' ஒலிவர் தன் கையிலிருந்த கைக்குட்டையைக் காட்டினுன்.

''நீ பெரியகெட்டிக்காரன்'' என்று கூறியபடி யூதன் மகிழ்ச்சியுடன் ஒலிவரின தலையில் தட்டிக் கொடுத்தான் ''இப்படி கெட்டித்தனம் உள்ள ஒரு பையனை இது வரை நான் கண்டதில்லை. இந்தா ஒரு சில்லிங் காசு வைத்துக்கொள். இப்படியே நீ முன்னேறினுல் பெரிய மனிதனுக வந்துவிடுவாய்'' என்கிருன்.

கிழவனின் சட்டைப்பையிலிருந்து கைக்குட்டையை எடுப்பதின் மூலம் எப்படி பெரிய மனிதனுக வரமுடியும் என்று ஒலிவர் யோசித்தான்-இருந்தாலும் யூதன் வயதில் மூத்தவன் —அனுபவசாலி— அவனுக்கு எல்லாமே தெரியும் என்று நினைத்துக்கொண்டான்.

மேசையருகில் அழைத்துக் கைக்குட்டைகளிலுள்ள குறிகளை அகற்றுவது எப்படி என்பதை ஒலிவருக்குச் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தான் பேஜின்.

[தொடரும்]

# புதியது

உள்ளம் புதிதன்று உடலும் புதிதன்று
மெள்ளப் புலர்ந்துவரும் நாள்தான் மிகப்புதிது
உள்ளத் துதிக்கின்ற உற்சாகம் தான் புதிது
கள்ளம் தனைப்போக்கும் கருணைக் கடல் புதிது

அறிவு புதிதன்று ஆற்றல் புதிதன்று
வெறுமை ஊனநீக்கும் வீரம் அதுதான் புதிது
பொறுமை மிகப்புதிது புல்மை களைந்தோடும்
அறிவின் ஒளிக்கீற்று அதுவே மிகப்புதிது


அன்பு புதிதன்று அகிலம் புதிதன்று
அன்பை அகிலத்தார்க்(கு) அருளும் குணம் புதிது
இன்பம் மிகப்புதிது இதயப் புதுமலர்வால்
என்றும் புதிதெனலாம் எல்லாம் புதிதெனலாம்

கோப்பாய் - 'சிவம்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு உண்மைச் சம்பவம்

# சிங்கப்பூரில் ஒரு ‘அந்தரப்’ பயண விபத்து: Cpl செல்வநாதன் மீட்புப்பணியில் சாகஸம்!



சிங்கப்பூரின் ‘கேபிள்கார்’ பயணம்

## 1983ம் ஆண்டு ஜனவரி 29ந் திகதி, சனிக்கிழமை.

என்றுமில்லாதவாறு அன்று மாலை சிங்கப்பூர் துறைமுகத்தில் திகைப்புடன் கூடிய ஒருவித பரபரப்பு!

ஆர்ப்பரிக்கும் கடல் அலைகள். மப்பும் மந்தாரமுமாக மழைமேகங்கள் இரவாகிக் கொண்டிருக்கும் அம் மாலை வேளையுடன் சேர்ந்து அந்தத் துறைமுகப் பிரதேசத்தை கும்மிருட்டாக்கிக் கொண்டிருந்தன

கூட்டம், கூட்டமாக தரையில் துறைமுக ஊழியர்கள், தீயணைப்புப்படையினர், விமானப் படையினர், பொலிஸார் உட்பட பெருந்தொகையானோர் வானத்தையே பார்த்தபடி நின்றனர்.

‘பிளாஷ்’ வெளிச்சங்கள் (flash Lights) அந்தக் காரிருளைக் கிழித்துக் கொண்டு அவர்கள் பார்வை நிலைத்த பகுதிக்கு ஒளியைப் பாய்ச்சுகின்றன.

அங்கே மெய்சிலிர்க்கும் காட்சி!

கடலிலிருந்து சுமார் 200 அடி உயரத்தில் நான்கு உல்லாசக் ‘கேபிள் கார்கள்’ (Cable cars) அவற்றின் கேபிள்களிலிருந்து அறுபட்டு நூலிழையில் தொங்கிக்கொண்டிருநதன.

கவிழ்த்து விடப்பட்ட குப்பைத்தொட்டிகள் போல அவை சரிந்து காணப்பட்டன இச்சரிவில் சிக்குண்டு அந்தக் ‘கேபிள்கார்’ களின் ஜன்னல் சட்டங்கள், கதவோரங்களைப் பிடித்தபடி உயிருக்காகப் போராடிக் கொண்டிருந்தனர் 13 உல்லாசப்பயணிகள்!

### சென்ரொசா தீவு

சென்ரொசாதீவு. (Sentosa island) சிங்கப்பூர் துறைமுகமூடாக கேபிள் கார்’களில் இங்கு போய்வர ஒரு மைல் பயணம்.

சிங்கப்பூரின் உல்லாசப் பயண விநோதங்களில் ‘கேபிள் கார்’ பயணம் சிலிர்ப்புடன் கூடிய சொகுசானதொன்று.

சின்னஞ்சிறு சிங்கப்பூரின் பெரும் பகுதியை இப்பயணத்தின்மூலம் கிடைக்கும் ஒரு பறவைக் கண்ணோட்டத்தில் (Birds eye view) பரந்தளவில் பார்த்துவிடலாம்.

அன்று அந்தத்துயரகரமான சம்பவதினத்திலும் ‘கேபிள் கார்’ பயணம்வழமைபோலவே உல்லாசப்பயணிகளைக் கவர்ந்திருந்தது.

எதிர்பாராத-நம்பவே முடியாத அப்பயங்கரத்தை அவர்கள் தெரிந்திருக்க வேண்டிய அவசியமில்லை.

ஏனெனில் அந்த ‘அந்தரப் பயணம்’ சிங்கப்பூரின் உயிரோட்டமானது. வருடாவருடம் லட்சக்கணக்கானோர் அப் பயணத்தில் பரவசமடைகின்றனர்.

அன்று மாலை 5-30மணி. ஒரு குமிழ்வடிவ செந்நிறமான கேபிள் காரில் ஏழுபேர் கொண்ட ஒருஇந்தியக்குடும்பம் அதனுள் ஏறிப்பயணத்துக்குத் தயாராகிறது.

## 200 அடி உயரத்தில் ‘கேபிள் கார்கள்’ பயணிகளைக் கடலில் பொலபொலவெனக் கொட்டின!

மழைமேகங்கள் திரண்டு செல்கின்றன. சென்ரொசா தீவிலிருந்து மீண்டும் சிங்கப்பூர் செல்ல அந்தக் கேபிள்கார் புறப்படுகின்றது.

அதன்முன்னால் வேறு இரண்டு. தொடர்ந்து பின்னால் ஒன்றன்பின் ஒன்ருக பதின்மூன்று. சென்ரொசாவிலிருந்துவிடைபெற்று மேலெழுகின்றன அவை.

185 அடி உயரம். கீழே சென்ரொசாவையும் சிங்கப்பூர் துறைமுகத்தையும் பிரிக்கும் தென்சீனக்கடல். ‘அந்தர சொகுசுப் பயணம்’ தொடருகிறது.

### குதூகலம் பயங்கரமாயிற்று

அந்த இந்தியக் குடும்பம் இருந்த கேபிள்காரில்ஒரேகுதூகலம். அது ஒரு சில நிமிடங்களே நீடித்தது. மன்மொஹன் கௌர் என்ற அதனுள்ளிருந்த இளம்பெண் ‘‘ஆ’’ என்று அலறுகின்ருள். திடீரென அந்தக் கேபிள்கார் ஆட்டங்காணுகின்றது

முன்னே சென்ற நீலநிறக் கேபிள்கார் அது தொங்கிச் சென்ற கேபிளிலிருந்து அறுபட்டுக் கடலில் வீழ்கிறது. அதன் பின்னால்வந்த வேரொரு சிவப்புக்கார் ‘பொல பொல’ வென்று அதனுள்ளிருந்தவர்களைக் கடலினுள் கொட்டுகின்றது

கேபிள்கள் சிர்குலைகின்றன. மன்மொஹன் கௌர் இருந்த கேபிள்கார் பக்க வாட்டில் இருபுறமும்ஊஞ்சலைப்போன்று பலமாக ஆட்டம் போடுகிறது

கண் இமைக்கும் நேரத்தில் மின்னலென அப்பயங்கரம் நிகழுகிறது 22 மாதங்களே நிறைவான மன்மொஹன் கௌரின் மகன் தல்விந்தர் கடலினுள் எறியப்பட்டான்.

அவனது பாட்டியார் பிரித்தம் கௌரும், தான்காலூன்றி நின்ற அந்தக் காரின் தளம் சரியவே ஒரு சிறு துரும்பாக ‘ஓ’ வென்றபடி கடலினுள் சங்கமிக்கிருர்.

### ஏழு பேர் கடலில் வீசப்பட்டனர்

மன்மொஹன் கௌர் மூர்ச்சையற்றுச் சாய்ந்தார். அப் பெண்ணின் குடும்பத்தைச் சேர்ந்த மூவருடன் ஏழுபேர் கடலில் வீசப்பட்டனர்.

பலும் நங்கூரமிட்டு நின்றது.

அது ஒரு எண்ணெய்த் தாங்கிக் கப்பல். அதன் உயரமான 223அடி உருக்குக் கோபுரமே அந்த கேபிள்களைத் துண்டித்து விட்டது.

எதிர்பாராத ஒரு மோதல் கீழே கப்பல்கள் போவது அன்ருட நிகழ்ச்சி. ஆனல் அன்று அந்த நீண்ட கோபுர எண்ணெய்த்தாங்கிக் கப்பல் அது இணைக்கப்பட்டிருந்த இழுவைப்படகிலிருந்து (Tug Boat) துண்டிக்கப்பட்டுக் கட்டுப் பாட்டை இழந்தது.

தொடர்ந்து ‘அக்கோபுரம்’ கேபிள் கார்களின் கேபிள்களில் மோத அப்பயங்கர விபத்து அத்துறைமுகப் பகுதியையே உலுக்கிவிட்டிருந்தது.

லெப்டினன்ட் லெட்ஜர் ஒரு நியூஸிலாந்து கடற்படை விமானி. சிங்கப்பூர் வீரர்களுக்குப் பயிற்சியளிக்க வந்தவர். தமது ஹெலிகாப்டரை செயலிழந்த கேபிள் கார்களுக்குச் சமீபமாக அவற்றின் மேலே கொண்டுவந்தார்.

### ரம்மியமான சிங்கப்பூர்

அர்த்த ராத்திரி வேளை-

இந்தநேரத்தில் மட்டும் அந்தக் ‘கேபிள் கார்’ சவாரி சுகமாக நடந்திருக்குமானல் மின்னொளியில் மிதந்த அந்த ரம்மியமான சிங்கப்பூரைப் பார்ப்பதற்கு உயிர்ப்பிச்சை வேண்டி

**பா. அனந்தகிருஷ்ணன்**

‘அந்தரப் பயணம்’ நிறுத்தப்படுகிறது. நான்கு கேபிள் கார்களின் கதவுகளையும், ஜன்னல் சட்டங்களையும் உடம்பின் அனைத்துப் பகுதிகளாலும் கவ்விப்பிடித்தபடி ஜீவமரணப் போரில் குதித்தனர் 13 உல்லாசப் பயணிகள்.

கால் எலும்புகளில் முறிவு. தலைகளில் பலமான அடி.புண்பட்ட இடங்களில் குருதி பெருகிக்கொண்டிருந்தது

மன்மொஹன் கௌருக்கு மயக்கம் தெளிந்தது. பக்கத்து ‘சீட்’டில் 4 வயதான மற்ரெருமகன் பல்விந்தர் ஜன்னல் சட்டத்தைப் பிடித்தபடி இருந்தான்.

அவனுடன் வேறு இரு உறவினர்கள் கீழே கொந்தளிக்கும் கடலையே வெறிக்கப்பார்த்தபடி தமது பிடியைத் தளரவிடாது ஊசலாடிக் கொண்டிருந்தனர்.

### சிக்கலான மீட்புப்பணி

நள்ளிரவு நேரம்—

சிங்கப்பூர் விமானப்படை விரைந்து இயங்கிக்கொண்டிருந்தது லெப்டினன்ட் லெட்ஜர் செலுத்திய அந்த ஹெலிகாப்டர் மெதுவாக மேலே கிளம்பிக்கொண்டிருந்தது.

சிக்கலான மீட்புவேலை உயிர்களைக்காப்பதே மிக முக்கிய நோக்கம். இப்பணியைக் கச்சிதமாகத் திட்டமிட்டதாலேயே இந்த நீண்டதாமதம்.

கீழே கடலில் மீட்புப்படகுகள். தீயணைப்புப் படகுகள், உதவியாளர்கள்.

கூடவே அந்த உல்லாசப் பயணத்தைச் சிதறடித்த கப்பலும் ...

நின்ற அப்பயணிகளுக்கு ஆயிரமாயிரம் கண்கள்கூடப்போதாமலிருந்திருக்கும்

‘ரெஸ் கியூவன் - வன்வன்’ (Rescue one-one) என்ற அந்த ஹெலிகாப்டர் தனக்குவேண்டியஇடத்தில் நின்று கொண்டது.அதிலிந்து ஒருகேபிள்வயர் சிறிது சிறிதாக கீழே நீண்டு கொண்டிருந்தது.

அந்த வயரில் தலைக்கவசம் அணிந்த ஒருவீரர் கீழிறங்கிக் கொண்டிருந்தார் லான்ஸ் கோப்ரல் செல்வநாதன் என்ற அந்த விமானப்படை வீரர் மன்மொஹன் கௌர் குடும்பத்தின் கேபிள்காரை நெருங்கினர்.

சார்ஜன்ட் ஹொசு கெங் அந்தக் கேபிள் வயரை கீழிறக்கிக் கொண்டிருந்தார்.

மன்மொஹன் கௌரின் கேபிள்கார் தனது மகனைக் கெட்டியாகப் பிடித்தபடி இருந்த அப்பெண்மணி அக் காரின் கதவருகே ஒரு உருவம் ஆடிக்கொண்டிருப்பதைக் கண்டாள்.

### வீடு சேர்க்கப் போகிறேன்

‘‘நான் உங்களை வீடு சேர்க்கப்போகிறேன்’’ என்றது அந்த உருவம்.

‘‘ஆ’’ என்று ஆச்சரியத்தில் வாயைப் பிளந்தான் சிறுவன் பல்விந்தர்.

தான் கும்பிட்ட தெய்வமே நேரில் வந்துவிட்டது போன்ற பிரமை அந்த நள்ளிருளில் செல்வநாதனின் உருவத்தைக் கண்டபோது மன்மொஹன் கௌருக்கு ஏற்பட்டது.

பல்விந்தரின் இடுப்பைச் சுற்றி மீட்புப்பட்டியைக்கட்டினர் செல்வநாதன். ‘‘அங்கிள் என்னைக் கீழே போடவேண்டாம்’’ என்று பயம் நிறைந்த குரலில் கெஞ்சினன் அந்தச் சிறுவன்.

‘‘பயப்படாதே இப்போ நீ ஒரு ‘ஜாலியான ஹெலிகாப்டர் சவாரி போகப்போகிருய்’’ என்றபடி அலாக்காக அவனைத் தனது கேபிள்வயரில் தொங்கியபடி ஹெலிகாப்டரில் சேர்ந்தார் செல்வநாதன்

மீண்டும் கீழேவந்தார் அவர் உள்ளே இருந்தவர்களுடன் இதமாகப் பேச்சுக் கொடுத்தார்.

### பல்விந்தர் ஆசைப்படுகிறான்

‘‘பல்விந்தர் உங்களைப் பார்க்க ஆசைப்படுகிருன் என்னுடன் வாருங்கள்’’ என்ருர் அந்தவீரர்.

மரண அவஸ்தையிலும் இந்தக் கனிவான வார்த்தைகள் மன்மொஹன் குடும்பத்தை மெய்மறக்கச் செய்து ஹெலிகாப்டரில் ஏற்றியது.

இவர்களைப்போன்று ஏனைய செயலிழந்த கார்களில் இருந்த இரு நியூஸிலாந்துக் காரர்கள் உட்பட சகல பயணிகளும் மரணப் பொறியிலிருந்து வெளியே எடுக்கப்பட்டனர்.

லான்ஸ் கோப்ரல் செல்வநாதன் மெய்சிலிர்க்கும் இந்த மீட்புப்பணியை அந்தரத்தில் தொங்கியபடியே கச்சிதமாக நிறைவேற்றினர்.

### கோப்ரல் செல்வநாதன்

இறுதியாகத் தனது பணியை முடித்துக் கொண்டு தான் தொங்கிக் கொண்டிருந்த கேபிள்வயரைப் பிடித்தபடியே ஹெலிகாப்டரில் ஏறிக் கொண்டிருந்தார் அவர்.

இந்தஏற்றம் சிங்கை விமானப்படையில் அவரது அந்தஸ்தை லான்ஸ் கோப்ரல் தரத்திலிருந்து கோப்ரல் தரத்திற்கு உயர்த்தியும் விட்டிருந்தது. இதனை அந்த ஹெலிகாப்டர் தரைதட்டியபோதே அத் தமிழ்மகனல் அறியமுடிந்தது.

சிங்கப்பூர் கேபிள்கார் விபத்தின் ஆரம்பத்தில் 7பயணிகள் கடலினுள்வீசப்பட்டது தெரிந்ததே. அவர்களில் மூவர் மன்மொஹன் கௌரின் குடும்பத்தவர்கள் அம்மூவரில் 22மாதங்களே நிறைந்த அவரின் மகன் தல்விந்தரும் ஒருவன்.

(11ம் பக்கம் பார்க்க)

## அமெரிக்காவில் எம். ஜி. ஆர்.

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கருணநிதியிடம் எதிரிகளும் ஒப்புக்கொள்ளும் கொள்கைப் பிடிப்பு, இலட்சிய வேட்கை என்பன இருக்கின்றன. அண்ணுவுக்குப் பின் தமிழே தன் மூச்சாகக் கொண்டிருக்கிருர். தமிழக மக்களுக்கு மட்டுமன்றி உலகத் தமிழ்மக்களுக்காகவும் அவ்வப்போது குரலகொடுத்து வருகிருர். இலங்கைத் தமிழர் விடயத்தில் ஒரு தீர்வு அவசியமென அவ்வப்போது வற்புறுத்தி வருகிருர். தனது தேர்தல் விஞ்ஞாபனங்களிலும் ஈழத்தமிழர் பிரச்னை பற்றி அவர் குறிப்பிடத் தவறியதில்லை. தமிழுக்காகத் தண்டவாளத்தில் தலைவைத்துப்படுக்கவும் தயாராயிருக்கும்தலைவர் கருணநிதி மட்டும் தான்.

லோகசபையைப் பொறுத்தளவில் அ தி மு க.வும்; தி. மு. க வும் எதிர்ககட்சிகள் தான். மத்தியில் பலம்வாய்ந்த அரசு ஒன்று அமையுமானல் இவர்களைப பற்றி எவரும்எண்ணிப் பார்க்கமாட்டார்கள். இன்றுஜனதாகூட்டணிஅமைத்து வடநாட்டில் மிகுந்தசெல்வாக்குப் பெற்றுள்ளது இந்திரா காங்கிரசை எதிர்த்து ஆட்சி அமைக்கமுடியாவிட்டாலும் பலம் வாய்ந்த எதிர்க்கட்சியாக விளங்குகின்றது.

எனவே இந்திரா காங்கிரசும் ஜனதாவும் முறையே அ. தி மு க.வுடனும் தி. மு. க. வுடனும் சேர்ந்து அதிகலோகசபை ஸ்தானங்களைக் கைப்பற்ற முயற்சிக்கின்றன.

தமிழக தேர்தலில் தி மு க. தலைவர் கருணநிதி மக்கள் மன்றத்தில் நேரடியாகவே தோன்றி வாக்குக்கேட்க அ. தி மு. க. தலைவர் எம். ஜி. ஆர். அமெரிக்காவில் இருப்பார். கைராசிக்காரரான எம். ஜி. ஆரின் இடத்தை நிதி அமைச்சர் நெடுஞ்செழியனல் நிரப்பமுடியுமா என்பது தான் இன்றைய கேள்வியாகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5

கிராமமே சுற்றி வளைக்கப் கப்பட்டு ஆயுதந்தாங்கியவர் களால் முற்றுகையிடப்பட்டு விட்டது.

எங்கும் வாகனங்களின் இரைச்சலாகவே இருந்தது

ஒலிபெருக்கியில் இளைஞர் கள் அனைவரையும் வாசிகசாலை யில் கூடுமாறு உத்தரவிட் டார்கள். இளைஞர்கள் தத்தம் அடையாள அட் டைகளுடன் வாசிகசாலையில் ஆஜராகிய வண்ணமிருந்த னர்.

வாகனங்களில் வந்தவர்கள் கிராமத்துக்குள் நுழையும் போது நேரே பரந்தாமனின் குடிசையைத்தான் சோதனை யிட்டது பரந்தாமனுக்கு பயத்தை ஏற்படுத்திவிட்டது

நல்லவேளையாக அவன் அப் போது அங்கே இருக்கவில்லை.

கிராமங்கள் சுற்றிவளைக்கப் படுவதும்இளைஞர்கள்கொண்டு செல்லப்படுவதும் இப்போ தெல்லாம் சர்வ சாதாரண நிகழ்ச்சியாகிவிட்டதால் ஒவ் வொருவர் உள்ளத்திலும் பயப்பீதி.

பரந்தாமனும் சில இளைஞர் களும் எங்காவது மறைவிடத் தில் ஒளித்துவிடுவது என்று தீர்மானித்துவிட்டனர்.

ஒலிபெருக்கியில் எச்சரிக்கை விடுத்தனர்.

அந்த நேரத்தில் அங்கு வந்துசேர்ந்த கந்தையரைக் கண்டதும் 'இங்கு வாங்க ஐயா...'' என்று ஒருவன் அழைத்தான்.

அங்கே நிற்பவர்களுக்கு தலைவன் போல தெரிந்தது.

கிட்டப்போனதும் சிங்களத் திலேயே தொடங்கினர் கந்தையர்.

அவனுக்கு திடீரென ஒரு மலர்ச்சி.

கந்தையர்தான் வேலைசெய்த இடங்களையெல்லாம் கூறி தன்னைப்பற்றிய ஒருவிளக்கமே கொடுத்தார்.

இருவரும் இப்போது நண்பர் களாகி விட்டதுபோல இருந் தது.

எட்டாம் வகுப்புப்படிக்கும் போதே பாடசாலைக்கு முழுக் குப்போட்டு விட்டு பிள்ளைகளை கொழும்புக்கு அனுப்பிவிடுவது தான் அந்தக் கிராமத்தவர்க ளுக்கு பழக்கமானது.

அதற்குமேல் படித்தவர்களை அந்தக்கிராமத்தில் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

கொழும்புக் கடைகளில் வேலைசெய்த அவ்வூர் இளைஞர்க ளெல்லாம் ஒவ்வொருவராக இப்போது ஜெர்மன், பிரான் சில் அகதிகளாகி விட்டனர்.

இப்போதெல்லாம் படித்த வர்களை மட்டுமல்ல ஊரிலுள்ள இளைஞர்களையும் விரல்விட்டு எண்ணிவிடலாம்.

கிராமத்தைப்பற்றி கந்தை யர் விளக்கமளித்துக் கொண்




செல்லர் மட்டும் எதுவித சலனமுமின்றிக் காணப்பட் டார். தனது வீட்டில் ஆண் பிள்ளைகள் எவரும் இல்லைத் தானே என்ற திருப்தி அவ ருக்கு.

கந்தையர் அதற்கு விதிவிலக் காக காணப்பட்டார்.

ஊரில் நடக்கின்ற எந்த விடயத்திற்கும் தானே முன் னிற்க வேண்டும் என்பது அவ ரது நினைப்பு. இந்த விடயத்தி லும் தன்னால் முன்னுக்கு நிற்கமுடியவில்லையே என்ற கவலையே அவருக்கு இருந்தது.

பரந்தாமனும் சில இளைஞர் களும் செல்வர் வீட்டுக்குப் பின்னுள்ள பழைய வீடொன் றுக்குள் ஒளிந்துகொண்டனர்.

கந்தையரால் இருப்புக் கொள்ள முடியவில்லை. ''என்னை என்ன செய்யப் போகிறீங்கள்...'' என்று தனக்குள் சொல்லிக்கொண்ட வர் அப்படித்தான் ஏதும் ஒன் றென்றாலும் சிங்களத்தில் பேசிச்சரிப்பண்ணி விடலாம் என்று எண்ணியவாறு வாசிக சாலையை நோக்கிப்புறப்பட் டார்.

வாசிகசாலையடியில் கூடிய இளைஞர்களின் தொகையைக் கண்டதும் வந்திருந்தவர்க ளுக்கு மேலும் ஆத்திரம் கூடி யிருக்கவேண்டும்.

டிருந்தார்.

கிராமத்தினுள்ளே குழுக்கள் குழுக்களாக சென்று வீடு வீடாக தேடுதல் நடத்திக் கொண்டிருந்தனர்.

செல்லரின் வீட்டுக்குப் பின் னால் ஒழிந்திருந்த இளைஞர்கள் தப்பமுடியாது என்ற நிலை. தூரத்தே ஒவ்வொரு வீடுகளும் சோதனையிடப்படுவது தெரிந் தது.

அவர்கள் ஒழிந்திருக்கும் வீட் டுக்குள்ளும் வந்தால் நிச்சயம் தப்பமுடியாது.

பக்கத்து வீட்டுக்குள்ளும் அவர்கள் வந்துவிட்டது தெரிந் தது. எல்லோரும் பாய்து விழு ந்து ஓடினர் செல்லர் வீட்டு வேலியால் பாய்ந்து அவரது வளவுக்குள் குதிக்கும்போது ஒருவன் கண்டு விட்டான்.

தொடர்ந்து துப்பாக்கி வேட் டுச்சத்தங்கள் கேட்டன...

பரந்தாமன் ஓடிச்சென்று வைக்கோல் பட்டறையினுள் ஒழிந்துகொண்டான்.

சத்தம்கேட்டு பின்பக்கமாக ஓடிவந்த செல்லர். ''ஐயோ... அம்மா'' என்று அலறியபடி நிலத்தில் சரிந்தார்.

இதனிடையே வேறுபல அல றல் சத்தங்களும் கேட்டன.

செல்லரின்வீடு சுற்றிவளைக் கப்பட்டுவிட்டது சில இளை ஞர்கள் சடலங்களாகவும் சிலர் உயிருடனும் பிடிபட்டனர்.

எல்லாமே ஒருசில நிமிடங் களில் நடந்து முடிந்துவிட்டது.

முற்றுகை யிட்டிருந்தவர்கள் திரும்பிவிட்ட பின்னர், ஊரி லுள்ள அனைவருமே இப்போ செல்லர் வீட்டில்.


கந்தையர்தான் ஓடியாடி வேலைகளைக்கவனித்துக் கொண் டிருந்தார்.

பிடிபட்டவர்கள் யார்? இறந் தவர்கள் யார் என்ற விபரம் எதுவும் யாருக்குமே தெரி யாது. இதனால் பிள்ளைகளைக் காணாத பெற்றோரெல்லாம் கந்தையரின் காலில் விழத் தொடங்கிவிட்டனர் அவ ரைப்பிடித்தால் எப்படியும் தங்கள் பிள்ளைகளைப் பற்றி அறிந்துவிடலாம் என்பது அவர்களது நம்பிக்கையாக விருந்தது.

அவர் வாசிகசாலையடியில் வந்திருந்தவர்களுடன் சிரித்துச் சிரித்துக் கதைத்துக்கொண்டி ருந்தது வேறு ஊர் முழுவ தும் பரவியிருந்தது.

செல்லரின் கிரியைகள் முடிந்தபின்னர் அவர்களைக்

(10ம் பக்கம் பார்க்க)




## காட்சி 4

### (களம் 2)

(ஒளி மங்கலாகிறது. மேடையெங்கும் இருள் கௌவுகிறது. இரவு என்பதைக் காட்டத் துல்லியமான ஒளி பரப்பப் படுகிறது)

இடம்: அக்கிரனின் அந்தரங்க அறை
நேரம்; முன்னிரவு

பாத்திரங்கள்: அக்கிரன், துன்மந்திரி மதனன், பணியாள் ஒருவன், சேவகர்கள், சேனாதிபதி

**அக்கிரன்:**

தந்திர நரியின் விந்தைகள் கற்ற
மந்திரி மதனா! மதுச்சாடி எங்கே?
தேவர்கள் அருந்தும் தேவா மிர்தமும்
நாவுக் கினிய சோம பானமும்
மதுவே யன்றி மற்றவை யல்ல

**மதனன்:**

இதுதெரி யாதா எனக்கு வேந்தே

**அக்கிரன்:**

புதுப்புது எண்ணம் பூத்திட வேண்டில்
மதுவினை அருந்து மகிழ்ச்சியைத் தூண்டு
(பணியாள் [illegible] மதுவைக் கொடுக்கிறான்
இருவரும் [illegible]ன்றனர்)

**அக்கிரன்:**

மதனா நீயென் மந்திரி; ஆனால்
அதிகாரம் மிக்க அரசனைப் போல்வாய்
இந்த நாட்டிலே எந்தச் செயலும்
சிந்தனை யின்றியே செய்திட உனக்கு
உரிமைகள் பலவும் உதவியுள் ளேன்யான்
கரிசனை யோடெக் காரிய மேதும்
துணிவுடன் செய்யும் சூழ்ச்சியில் வல்லோய்
மணிமுடி தரித்து மண்ணினை ஆளும்
தனிப்பெரும் தாரணி வேந்தனோ அல்லேன்
குனிந்து வணங்கிக் கப்பம் கொடுத்து
சிற்றூரை ஆளும் சிற்றர சாவேன்
அற்ப பதவிமேல் ஆசைப்பட்டு
எப்பவும் இப்படி இருப்பது சரியா
ஒப்பிலாத் திட்டம் ஒன்றுரு வாக்கி
ஆட்சியை வளர்த்து அதிகாரம் பெருக்கி
மாட்சிமை யுடைய மன்னனா கேனோ
சத்திய கீர்த்தி தன்னையே அடக்கி
எத்திசை போற்ற யானிருக் கேனோ
பத்தினிப் பெண்களும் பாவையர் பலரும்
சுற்றியே நின்று தொண்டுகள் புரியவும்
கற்றவர் மற்றவர் யாவரும் வணங்க
அந்நிய வேந்தரும் அடிபணி யாரோ
இக்கன வெனக்கு இனித்திடும் நனவாய்
தக்கவா றடையச் சந்தர்ப்ப முண்டா
மந்திரி மதனா மனதிலே யிருந்து
கொன்றிடும் ஆசையைக் கூறியே விட்டேன்
உருப்படி யான உந்தன் கருத்தை
விருப்புடன் எனக்கு விளம்பிட வேண்டும்
(மதுவை ஊற்றிக் குடிக்கிறான்)

**மதனன்:**

ஆத்தூர் ஐய!உன் ஆசைஅறிவேன்
ஏத்திப் போற்றும் ஈடில் பேரரசாய்
ஆகுதல் என்பது அணில்ஒரு மலையை
நகர்த்த நினைக்கும் நகைப்புச் செயலாம்
இருக்கிற நாட்டை இழந்திடா திருக்க
விருப்புடன் யானும் வேண்டிய செய்வேன்

**அக்கிரன்:**

மதனா! கொஞ்சம் மதுவினை அருந்து
புதிய சூழ்ச்சிகள் உதிக்கவும் கூடும்
முயற்சி யில்லாமல் உயர்ச்சியே இல்லை
மயக்கிடும் மதுவென மற்றவர் உரைப்பினும்
அதுஉன் மட்டில் விதிவிலக் கென்பேன்
ஆதலால் நன்கு அருந்துக; பின்னர்
எந்தன் வளர்ச்சிக்கு ஏற்ற சூழ்ச்சிகள்
சிந்தையில் தோன்றும்; சிற்றர சென்னை
மாமன்ன னாக்கும் வழியும் பிறக்கும்
[மதுவை ஊற்றிக் கொடுத்தபின்
தானும் மதுவை அருந்துகிறான்]

(வேறு)

**மதனன்:**

அன்பான ஆத்தூருக் கரசே கேளும்
அதற்கேற்ற வழிசொல்வேன்; செல்வி
என்னும்
பொன்போன்ற மகள் சத்திய கீர்த்திக்
குள்ளாள்
புருஷன் எவன்மணப்பானோ; அவன்
அந்நாட்டின்
மன்னனால் முடிசூடும் உரிமை கொள்வான்
மார்க்க மிதைத் தவிரவேறு வழியே இல்லை
மின்னலவள் தனைநீயும் அடைவ தற்கு
மெச்சுவொரு திட்டமதைத் தீட்டவேண்டும்

**அக்கிரன்:**

செல்வியவள் பேரழகி; திறமை மிக்காள்
தேர்ந்த கலைஞான மெலாம் சேரப்பெற்றாள்
எல்லோரும் புகழ்கின்ற பண்பும்
கொண்டாள்
என்றெல்லாம் பலர்கூறக் கேள்விப்பட்டேன்
வல்லியவள் தனையடையும் ஆசை யுண்டு
வாய்க்குமா? சிற்றர சனான என்னைப்
புல்லெனவே ஒதுக்கிவிட்டால்
மதிப்பென் னாகும்
போடுகின்ற திட்டம் வெற்றி பெறவே
வேண்டும்

**மதனன்:**

ஆத்தூருக் கணித்தான நாடு போற்றும்
அறக்கோட்டை; அவ்வூரில் அம்ம னுக்கு
சாத்திர முறைப்படியே விழா வெடுத்துச்
சகலகலை நிகழ்ச்சிகளும் நடத்தி வைப்பர்
பூத்தமல ரன்னசெல்வி வருடந்தோறும்
பூசிக்கச் செல்கின்ற வழக்க முண்டு

**அக்கிரன்:**

காத்திருந்து வழியிலே கடத்து வோமா
கடத்தினால் தீங்கன்றோ வந்து சேரும்

**மதனன்:**

நேரடியாய் இச்செயலைச் செய்வோ
மென்றால்
நிச்சயமாய் பழியோடு அழிவும் சேரும்
வாரணிந்த மங்கையவள் செல்லும் போது
வழியிலே தந்திரத்தால் மடக்கவேண்டும்
பேரடவிதனில் பெரிய திருடர் கூட்டம்
பெண்ணவளை வளைக்க அந்த நேரம்
பார்த்துத்
தேரதிலே செல்கின்ற அக்கிர மன்னன்
திருடர்களை வென்றபயம் அளிக்கவேண்டும்
விருந்தாக அவளை நீ அழைக்க வேண்டும்
விருப்பறிந்து விருந்துதர வைக்கவேண்டும்
அருமைமிகு மகளை நீ காத்தாய் எனறே
அரசன் உனை மருகனாய் ஏற்க வேண்டும்

**அக்கிரன்:**

சிரமமின்றிச் சொல்லி விட்டாய் நண்பா
ஆனால்
செயலிலே செய்தால்தான் உண்மை இந்தக்
கருமது முடியுமட்டும் கண்துஞ் சேன்யான்
காரியத்தைச் செய்து முடி;கவலை வேண்டாம்

(மதுவை இருவரும் அருந்துகின்றனர்-
அப்பொழுது கத்தியொன்று வந்து விழுகிறது
அதிலே ஓர் ஓலையுள்ளது.

(அக்கிரன் எழுந்து தட்டுத்தடுமாறிவிழுந்தபடி)

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இம்மாதம் 13ந் திகதி 2-வது நூற்றாண்டு நினைவுதினம்

ஜோன்சன் மருத்துவக் கலாநிதியா? என்ற சந்தேகத்துக்கு இடமுண்டு. வேறெந்த இலக்கியக் கலாநிதியையும் டாக்டர் என்றழைக்கும் வழக்கமில்லாத இங்கிலாந்தில் இச் சந்தேகத்துக்கு நியாயமுண்டு. இந்த அற்புத மனிதன் வாழ்க்கை முழுதும் நோயால் பீடிக்கப்பட்டதுபோல தோன்றினலும் மருத்துவத்தையும் மருத்துவரையும் அவர்நாடியதில்லை; பெரும்பாலும் நோய் என்ற பயமும், மரணம் என்ற பேரச்சமும் அவரை வாட்டிய போதும் மருத்துவரைக் காண்பதென்றல் வறுமை அதிகரிக்கும் என்ற நம்பிக்கை கொண்டவர். இத்தகைய மனிதன் என்றும் எங்கும் டாக்டர் ஜோன்சன் என்று அழைக்கப்பட்டது இலக்கிய வரலாற்றின் விசித்திரம்.

யார் இந்த டாக்டர்? இவ்வுலகை நீத்து இன்னும் சில தினங்களில் (13-12-1984) 200 ஆண்டுகள் கழிந்துவிடும். இலக்கியமேதைகள் குறிப்பாக ஆங்கில இலக்கிய திறனாய்வாளர் இந்தக் காலத்தில் ஜோன்சனின் பெருமையை இக்கால அளவுகோல்கொண்டு கணிப்பிடமுயல்வார். பல புதிய கருத்துக்கள் வெளிவரும்.

மத்திய இங்கிலாந்தில் லிச்பீல்ட் என்ற சிற்றூரில் ஒரு புத்தக வியாபாரியின் மகனாக செப்டெம்பர் 18, 1709 இல் அவதரித்த சாமுவேல் ஜோன்சன் உயர்கல்விக்குப் பொருள் இல்லாதவராகத் திண்டாடினர். தகப்பனர் புத்தகங்கள் வாசிப்பதில் காலம் கழித்ததல்லாமல், அவற்றை விற்று வருவாய் தேடவில்லை. ஆனல் அயலவர் ஒருவர் இளைஞனின் திறமை கண்டு 'ஒக்ஸ்போர்ட்,

ஆனல் அப்பெண்ணில் டாக்டருக்கிருந்த அளவு கடந்த விசுவாசமும் அன்பும் மனைவி தமது 64ம் வயதில் இறந்த போது அவர் பட்ட துயரம் விளக்கியதென்று வரலாறு கூறுகிறது.

### வாழ்க்கை

### பத்திரிகையாளர்

பத்திரிகையாளராகப் பணி புரிந்தபோது அவருடைய

டாம்பீக வாழ்வுக்கு வறுமையின் உருவமான ஜோன்சன் ஒரு இடைஞ்சலாக நினைத்துவிட்டார் வெருளி உடுப்பில் வந்து சீமான்கள் சீமாட்டிகளின் விருந்துபசாரத்தில் வெங்கலக்கடையில் யானை புகுந்தது போல் நடமாட இவருக்கு இடமளிக்கப்படாதென்பதே பிரபுவின் உடனடித் தீர்மானம்.

1755ல் உலகம் இந்த முக்கியத்துவமான, அந்த சமயம் ஆங்கில மொழியின் முதல் அகராதியைக்கண்டது. இலக்கிய



"கலைஞருள் கலைஞன்; மனிதருள் அதிமனிதன் என்று மதிக்கப்பட்ட டாக்டர் சாமுவேல் ஜோன்சன் தம்முடைய நாட்டுக்கும் தமது காலத்துக்கும்மட்டுமல்ல, எக்காலத்துக்கும் எந்த நாட்டுக்கும் உரிய சான்றேன்"

— ஜேம்ஸ் பொஸ்வெல்

லண்டன் வாழ்க்கை தொடங்கியது, பாராளுமன்ற விவாதங்களை விமர்சித்துவந்த ஜோன்சன் Gentlemen's Magazine என்ற ஒன்பது வயதுடைய சஞ்சிகையை நன்றாக எழுப்பிவைத்தார், தமது பேராற்றலால் நடுநிலைமையைப் பேணி வந்தபோதும் எதிர்க் கட்சியின் கருத்துக்கு விசேட ஆதரவு அளித்து வந்த

உலகம் Dictionary ஜோன்சனை புகழ்ந்து பாராட்டியது. இதற்கு நிதிஉதவி நல்குவாரென்று எதிர்பார்த்த வள்ளல் செஸ்டர் பீல்ட் முழங்கையைக் காட்டிவிட்டார். அவரைத் தேடிப்போனபோதெல்லாம் வாயில் காவலர் அங்கு பிரபு இல்லை என்று சொன்னதின் தாற்பரியத்தை ஜோன்சன் விளங்கிக்கொண்டார்.

# ஆங்கில இலக்கிய மேதை

# டாக்டர் சாமுவேல் ஜோன்சன்

டுக்குத் தமது செலவில் படிக்க அனுப்பிவைத்தார்.

### ஒக்ஸ்போர்ட்

22 வயதில் தகப்பனை இழந்தவர் பல்கலைக்கழகத்தில் தொடரும் வாய்ப்பையும் இழந்தார். பட்டம் பெற முன்னரே வெளியேறிய ஜோன்சனுக்கு ஒக்ஸ்போர்ட் அவருடைய 66ம்வயதில் சிவில் சட்டத்துறையில் கௌரவ கலாநிதிப் பட்டத்தை (D C L) வழங்கித் தன்னையே கௌரவித்துக் கொண்டது. அன்றுபெற்ற பட்டமே என்றும் அவருடன் ஒட்டிக்கொண்டது. டாக்டர் என்றல் ஜோன்சன்.

வறுமையில் ஒரு பத்திரிகையாளனக ஆரம்பமான வாழ்க்கை சுமார் 30 வருடங்கள்

தால் வாசகர்மனத்தை நன்கு கவர்ந்தார். வயிற்றுப்பிழைப்புக்காக இதனைவிடபல விதப்பட்ட கட்டுரைகள் விமர்சனங்கள், பதிப்புரைகள் எழுதி மொழிவல்லுநர் என்ற பெருமையைப் பகிரங்கப்படுத்தினர்.

இதனைக்கண்டு கேட்டறிந்த லண்டனின்பிரபலஎழுத்தாளர்கள் பதிப்பாளர்கள் வியப்படைந்த நிலையில் திரண்டு அவரிடம் படையெடுத்தனர் 1747இல் நடந்த சம்பவம் இது. ஆங்கில மொழிக்கு ஒரு பேரகராதி (Dictionary) எழுத வேண்டுமென்று நெருக்கிய தால் அவர் (Dictionary) ஜோன்சன் •டாக்டராக முன்- என்ற பெருமைக்கு ஆளானர்.

### அகராதி

### பிரபுவுக்கு கடிதம்

அகராதி மலர்ந்தது கண்டு பெருவள்ளல் அதற்கு அணிந்துரை எழுத முற்பட்டார். வணங்காமுடியன் ஜோன்சன் இதனை அறிந்து பிரபுவுக்கு தீட்டிய கடிதம் ஆங்கில இலக்கியத்தில் தனிஇடம் பெற்றது.

Seven years, my lord, have now past since I waited in your outward rooms, or was repulsed from your door; during which time I have been pushing on my work without one act of assistance, one word of cheer, or one word of favour Such treatment I did not expect, for I never had a patron before.

"Is not a patron my lord, one who looks with unconcern on a man struggling for life in the water and when he has reached ground, encumbers him with help".

இது அந்த பிரபல கடிதத்தின் ஒரு பகுதி இதனை அறியாதார் ஜோன்சனின் அருமை பெருமையை அறிய முடியாதவரே!

"புரவலர் என்பவர், பிரபு, தண்ணீரில் தத்தளிக்கும் ஒருவனின் உயிரைப் பாதுகாக்க விரையாது அவன்தப்பிவந்து கரையடைந்ததும், பொன்னுடை போர்க்க முன் வருபவரா?"

டாக்டரை உலகறியச்செய்த முதல் நூல் இதுவானலும், அவருக்கு பெருமையையோ, பொருளையோ கொண்டுவந்த நூலென்று சொல்வதற்கில்லை. [illegible] நூல் | ஒரு சொல் [illegible]க்குரிய

## சின்ன பொஸ்வெல்

டாக்டரை அதேநிலையில்ஆட்டி வைத்தது.

26ம் வயதில் யவனப் பருவம் அவரைக் காதலில் வீழ்த்தியது, இந்தக் காதலுக்கு இலக்கான பெண்மணி, ஜோன்சனின் வயதுடைய பிள்ளைகளுக்குத்தாயான 48 வயதடைந்த விதவை திருமதி எலிஸபெத் போர்ட்டர் என்பவர் உண்மையில் அது ஒரு காதல் கல்யாணம். இருவரும் ஒட்டாண்டிகள் பிள்ளைகள் இல்லாத குடும்ப வாழ்க்கை. கண்பார்வை குறைவால் அந்தப் பெண் அழகுடையதாக டாக்டருக்குத் தோன்றியதாக ஊரார் பேசிக்கொண்டனர்;

இப்பாரிய பொறுப்புக்கு பதிப்பாளர் பண உதவி போதாதென்று கருதி அன்று பெருவள்ளலென்ற புகழ் பெற்ற செஸ்ட்டார் பீல்ட் பிரபுவிடம் (Chesterfield) தமது திட்டத்தைவிளக்கினர்.

யார் இந்தப் பெருந்தகை? அன்றைய பிரபுக்கள் சபையின் (House of Lords) மிகத்திறமையான பேச்சாளரென்று கருதப்பட்ட ராஜாங்க அமைச்சராகப் பதவி வகித்தவரே செஸ்டர்பீல்ட் பிரபு.

டாக்டரின் அறிமுகத்துக்கு ஆதரவு காட்டிய பிரபு ஒருசிறு தொகையை உடன் [illegible] அனுப்பிவைத்தார். [illegible]

பலவகைப்பட்ட கருத்துக்கள் தமது சொந்த அனுபவத்தில் உருவான வியாக்கியானம். வரலாறு, இலக்கியம், புவியியல், விஞ்ஞானம் போன்ற துறைகளில அச்சொல்லின் பிரயோகம், அதனை விளக்க ஏதுவான நகைச்சுவை. வேறெந்த அகராதியிலும் காணப்படாத அம்சங்கள். சில உதாரணங்கள்;

"பென்ஷன்" என்பது தனது நாட்டைக் காட்டிக் கொடுப்பவருக்கு அரசு வழங்கும் வேதனம்.

பென்ஷனர் (பென்ஷனியர் என்பது தவறு) "ஒரு எஜமானுக்கு அடிவருட அரசால் அமர்த்தப்படும் அடிமை" இன்று பென்ஷனர் இங்குபடும் பாடு அதற்குத்தானே?

கப்பல் என்றல் மறியற்சாலை [prison] போன்றது; ஒருவித்தியாசம், அபாயத்தில் தப்பி ஓடமுடியாது.

(11ம் பக்கம் பார்க்க)

## தீர்ப்பு

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கவனிக்கலாம் என்று ஆறுதல் கூறியிருந்தார் கந்தையர்.

நன்றாக இருட்டிவிட்டது.

பரந்தாமன் மெல்ல வெளியே வந்தான்.

நீண்ட நேரமாக வைக்கோலுக்குள் இருந்ததால் உடம்பு முழுவதும் சுணையுடன் வெளியே வந்தான்.

செல்வர் வீட்டின் முன்புறத்தில் காணப்பட்ட அமளியும்... அழுகைச் சத்தமும்...

அவனுக்கு எதுவுமே புரியவில்லை. பின் வேலியாலேயே ஏறிப்பாய்ந்து வெளியேறினன்.

மகனைக்கண்டதும் அவனது தாயால் நிலத்தில் நிற்கமுடியவில்லை.

"எப்பிடி ராசா வந்தனி..." என்றள்.

அவன் நடந்தவற்றையெல்லாம் கூறினன். ஆனல் அவன் வைக்கோல் பட்டறையினுள் நுழைந்த பின்னர் நடந்ததெதுவும் அவனுக்குத் தெரியாது.

செல்லரும் மோசம் போன செய்தியை தாய் சொல்லித்தான் அறிந்தான்.

அவனுக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது.

அவர் தனக்கு எதிரானவராக இருந்தாலும் அவரது மரணம் அவனுக்கு வேதனையை உண்டுபண்ணி விட்டது.

ஓடிச்சென்று அவரைப் பார்க்கவேண்டும் போல இருந்தது. போனல் அவமானம் ஏற்பட்டுவிடுமோ என்ற பயம் அவனது ஆசைக்குகட்டுப்போட்டது.

பரந்தாமன் வீட்டுக்கு வந்துவிட்ட செய்தி சில நிமிடங்களிலேயே ஊர் முழுவதும் பரவிவிட்டதால் ஊரவர்கள் அவனது வீடு நோக்கிப்படையெடுக்கத் தொடங்கியிருந்தனர்.

கந்தையரும் சைக்கிள் ஒன்றில் வந்து சேர்ந்தார். வெளியே சென்று வரவேற்றன் பரந்தாமன்,

"தம்பி என்னடா நடந்தது..." என்றர்.

பரந்தாமன் நடந்தவற்றை ஒன்றுவிடாமல் சொன்னன்.

"அடையாள அட்டை இல்லாததால்தான் எஸ். எம். நாங்க எல்லாரும் அங்க ஒழிச்சிருந்தனங்க..." என்று விளக்கினன்.

"தம்பி நான் இப்பவந்தது உன்னைப்பாக்க மட்டுமில்லை. உன்னைக் கூட்டிக்கொண்டு போக..."

"எங்க எஸ். எம்." என்று விழித்தான் அவன்.

"நீ இனி தங்களுக்கு மருமகன் மட்டுமில்லையாம். ஆம்பிளைப்புள்ளையும் நீதானம். செல்லருக்கு நீதான் கொள்ளியும் வைக்கவேணும் எண்டு காமாச்சி சொல்லிப்போட்டாள்"...

கந்தையரும் பரந்தாமனும் கேற்றைத் திறந்துகொண்டு உள்ளே சென்றனர்,

ஓடி வந்து கட்டியழுதாள் காமாட்சி.

"தம்பி... நான் சொன்னதையும் கேட்காமல் உன்னை இந்தக்கிராமத்தில் இருந்தே துலைக்கவேணும் எண்டு அவங்களுக்கு கடிதம் எழுதி நம்ம ஊருக்கு அவங்களைக் கூப்பிட்டாரே... அநியாயமாய்ப்போய் விட்டாரே"... என்று கதறினள் காமாட்சி.

காமாட்சியின் புதியதொரு செய்தியால் அங்கு நின்றவர்கள் எல்லோரும் அதிர்ந்து போய் நின்றனர்

(யாவும் கற்பனே)

### ஒரு ராமனைத் தேடி

குடும்பக்கடலிலே
குதித்தோடத்துடிக்கும்
கன்னித்தோணிகள்
கரையிலே
காத்திருக்கின்றன
கட்டி இழுக்கும்
சீதன
கயிற்றை அறுக்க
ஒரு
ஸ்ரீராமன்
வருவாஞ என்று!

— அ. தத்வசுதன்

## சிறுகதை...

(5-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களை நிச்சயம் இச்சமுதாயத்தினல் புரிந்து கொள்ள முடியாது. இறைவன் பகலவ விளக்கைச் சற்றுத் தாண்டி விடுகிறன் இதனைப் புரிந்து கொண்டவர்களை தேடி ஆனல் அவை புரியாத அர்த்தங்களே.

[யாவும் கற்பனை]

## பூம்பனிமலர்கள்

(4ம் பக்கத் தொடர்ச்சி)

வாங்கோ......"

"மோர்னிங், மோர்னிங்" பிரேமகாந்தன் சிரித்தபடியே கூறி, அவருக்கு அருகில்சென்று ஏதோ காதுக்குள் கிசுகிசுத்தான்.

மௌனமாக அவர் தலையாட்டினர். விருந்தையில் அமைந்திருந்த கடைசி அறை ஒன்றுக்குப் பிரேமகாந்தன் சென்றன்.

கலா பின் தொடர்ந்தாள்.

அறைமிக விசாலமாயும், சகலநவீன வசதிகளைக் கொண்டதாயும் அமைந்திருந்தது.

விடுதி உரிமையாளர் தானே இரண்டு போத்தல் பியர், பிஸ்கட், சீஸ் யாவும் கொண்டு வந்து உள்மேசையில் வைத்துவிட்டு மௌனமாக வெளியேறி விட்டார்.

பிரேமகாந்தன் கதவை மெதுவாகப் பூட்டினன். தன் சட்டையையும், பெனியனையும் கழற்றி 'ருக்'கில் மாட்டினன்.

கலா மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தாள்.

"கலா, சாப்பாட்டுக்குச் சிறிது நேரம் எடுக்குமாம்... கொஞ்சம் ரெஸ்ற் எடுத்துவிட்டுச் சாப்பிடுவம், சரிதானே......"

கட்டிலில் அமர்ந்திருந்த கலாவின் அருகில் பிரேமகாந்தன் வந்தான்.

"கலா, உமக்குக் கோபமா.....?" மெதுவாக அவள் கழுத்தில் தன்கையை வைத்தான்

கலா கையைத் தட்டிவிடவில்லை.

"ஏன்... எனக்கு எதற்கு கோபம்...?" "இல்லை தெரியாதா" இருந்தாற்போல் பிரேமகாந்தன் கலாவை இறுக்கி அணைத்தான். சற்றுத்திக்குமுக்காடிப் போனள் கலா. "டார்லிங்...கலா..." பிரேமகாந்தனின் குரல் கலாவின் காதுக்குள் மெதுவாக ஒலித்தது.

கலா தன்னை மறந்துபோனள்.

பட்டுப்புடவை கட்டி மலர் பூட்டி மங்களமாகச் சோபனம் கொண்டாட வேண்டிய கலாவின் பெண்மை அங்கு மெல்ல மெல்லக்கரைந்து கொண்டிருந்தது.

பிரேமகாந்தன் மீட்டிய வீணைநாதத்தில் கலா தன்னை இழந்து விட்டாள்.

(வளரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 12 நாட்களாகியும் காணவில்லையாம்

(பண்டத்தரிப்பு)

பண்டத்தரிப்பு, இளவாலை, செட்டியகுறிச்சியிலுள்ள தமது வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்ற பொன்னுத்துரை குணசேகரம் [30 வயது] என்பவர் 12 நாட்களாகியும் இன்னும் தமது வீட்டிற்கு திரும்பவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

இவர், வேலைக்காக வீட்டிலிருந்து புறப்பட்டுச் சென்றார் என்றும், இதுவரை பல இடங்களில் தேடியும் கண்டுபிடிக்கப்படவில்லை என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

ராணி (யாழ்ப்பாணம்)
10-30, 2-00,
FUTURE WOMAN
(கண்டிப்பாக வயது வந்தவர்களுக்கு)

ராஜா (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00
சிவாஜி - லக்ஷ்மி
ராஜராஜசோழன்
(கலர்)

வின்ஸர் (யாழ்)
10-30 மட்டும்
ரஜனிகாந்த்-ராதா-சரிதா
சில்க்-தேங்காய்-மனோரமா
சிவப்பு சூரியன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-00,
எஸ். எஸ். ஆர்.
விஜயகுமாரி
மு. கருணாநிதியின்
பூமாலை

றீகல் மினி
10-00, 12-30
[12-30 மணிக்காட்சி 2 மணிக்கு முடிந்துவிடும்]
Bruce K. L LEE...
BRUCE LEE FIGHTS BACK FROM THE GRAVE
[புறூஸ் லீ மீண்டும் தாக்குகிறார்-]
ஜேர்மன் மொழியில் ஜேர்மனியில் தயாரிக்கப்பட்டது,

லிடோ சினிமா
தினசரி 10-30, 2-00
MISSION BATANGAS
(War Film - Action packed)

வெலிங்டன்
(யாழ். நகர்)
10-30, 2-00, P. M.
ஜெய்சங்கர்
துணிவே துணை

நாளை ஐ. நா. மனிதஉரிமைகள் தினம்

# ஐ. நா. மனித உரிமைகள் பிரகடனம் ஏன்?

மனிதன் பிறக்கும்போதே உரிமையுடன்தான் பிறக்கிறான். உரிமை அவன் பிறப்புடமை. உரிமைகளுடன் அவன் வாழவேண்டும் என்பதை நீதிமான்கள் சகல நாடுகளிலும் ஒப்புக்கொண்டுள்ளனர்

இதில் எவ்வாறான உரிமைகளும் சுதந்திரங்களும் அடங்கியுள்ளன என்பதை உலக வரலாற்றிலேயே முதல் தடவையாக நிர்ணயம் செய்து கோர்வையாக இணைத்து ஐக்கிய நாடுகளின் பொதுச் சபை 'மனித உரிமைப் பிரகடனமாக' உருவாக்கியுள்ளது.

ஐக்கியநாடுகள் சபையில் அங்கம் வகிப்பதாகக் கூறப்படும் சகல நாடுகளும் இப்பிரகடனத்தை ஒருமனதாக ஏற்றுக்கொண்டுள்ளன. அத்துடன், இப் பிரகடனத்திற்கு இசைவாகத் தம் நாடுகளில் நடந்துகொள்வதை நோக்கமாகக்கொண்டு செயலாற்றுவதாக அந்நாடுகள் வாக்களித்தமை குறிப்பிடத்தக்கது,

ஆனால்- இப்பிரகடனத்துக்கு இசைவாகச் செயல்படுவதாக உறுதிபூண்டு வாக்களித்த பலநாடுகளில் மனித உரிமைகள் இன்று பல்வேறு வழிகளிலும் மீறப்படுகின்றன என்பது சர்வதேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற பொதுவான குற்றச்சாட்டாகும்.

### க. ஜீவகதாஸ்

மனித உரிமைகள் எனப்படுபவை ஒவ்வொரு மனிதனுக்கும் அவன் எங்கிருந்தாலும் கிடைத்தாகவேண்டியவையே. இடம், காலம், நிறம், சாதி, மொழி, உயர்வு-தாழ்வு, மதம் பிறப்பு போன்ற எந்தக் காரணத்தாலும் இந்த உரிமைகளில் எவற்றினையும் மறுக்கக் கூடாது.

மனித உரிமைகள் எனப்படுபவை உண்மையில் உலகிற்குப் புதியவையல்ல. உலகம் தோன்றிய நாள் முதல் ஒவ்வொரு சமுதாயத்திலும் இத்தகைய உரிமைகளையும் கடமைகளையும் சேர்த்துக் காலநிலைக்கேற்ப வரையறுத்து நடத்தி வந்திருக்கிறார்கள்.

தனிநபரின் உரிமைகள் கடமைகள் அரசின் உரிமைகளும் பொறுப்புக்களும் பல்வேறு பிரிவினரிடையே இருந்து வரவேண்டிய உறவு [illegible]றைகள் என்றெல்லாம் [illegible]க்கமாக நிர்ணயமாகி அ[illegible]லாகி வந்திருப்பதை வரலாறுகள் காட்டுகின்றன.

இந்தப் [illegible]தைத் தமது மக்களு[illegible]கமாக எடுத்துரைப்ப[illegible] எல்லா நாடுகளும் ஏற்றுக்கொண்டிருக்கின்றன என்பது கவனிக்கத்தக்கதாகும்.

இவை சரிவர நடத்தப்படுமாயின் அந்தந்த நாட்டின் நடைமுறைக்கும், பிரகடனத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இலட்சிய நிலைக்குமிடையே உள்ள 'இடைவெளி'யை மக்கள் நன்கு புரிந்து கொண்டு அதைச் சுருக்கி உரிமைகள் வேகமாக மலரச் செய்வதில் அக்கறை காட்ட முற்படுவார்கள்.

மனிதன் உயர்பிறவி. வாழ உரிமையுள்ளவன். கண்ணியமாக நடத்தப்படவேண்டியவன். சுதந்திரமாகச் செயலாற்றவேண்டியவன். பிறரது நலன்களையும் உரிமைகளையும் மதித்துப் பணிபுரியவேண்டியவன்.

இவற்றிற்கு வரம்புகள் உண்டு என்பதை அங்கீகரித்தும், அந்த அடிப்படையில் சகல நடவடிக்கைகளும் சகல நாடுகளிலும் உருப்பெறுவதன் அவசியத்தையும் முக்கியத்துவத்தையும் தெளிவுபடுத்துவதுதான் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமைகள் பிரகடனமாகும்.

## ஆங்கில இலக்கிய...

(7ம் பக்கத் தொடர்ச்சி)

கடல் மறியலை நேரில் கண்ட ஜோன்சன் கப்பல் பிரயாணத்தை விரும்பாதவர் என்பதை அறியமுடிகிறது. மறியற்சாலையில் ஏற்படக் கூடிய அபாயம் நாகரிக இங்கிலாந்து அறியாததும் இதனூல் விளங்கும்.

அகராதி இத்தன்மையதானலும் அவருடைய பண நெருக்கடி தீர்ந்தபாடில்லை பல சிறிய பெரிய நூல்கள், பாக்கள், நாடகம், கட்டுரை எழுதியும், பலருக்கு உதவியும் காலம் கழித்தார்.

பரிசு

1762ல் ஒரு பெரும் அதிர்ஷ்டம் கிடைத்தது. அரசரையும் அரசியல்வாதிகளையும் துச்சமென மதியாத ஜோன்சன், புதிய அரசன் மூன்றாவது ஜோர்ஜ் மன்னரால் கௌரவிக்கப்பட்டு வருடம் 300 பவுண் பென்ஷன் வழங்கப்பட்டார்; 30 வருட வறுமை வாழ்வுக்கு முடிவு கிட்டியது

இத்தகைய வசதி கிடைத்துவிட்டால் படுத்துத் தூங்கி சோம்பலில் சுகம் காணும் பிறவி அறிஞர் ஜோன்சன் ஆனல் டாக்டரின் கலை பயில் தெளிவும் கட்டுரை வன்மையும் இன்னொரு முயற்சிக்குத் தூண்டியது. ஷேக்ஸ்பியர் நாடகங்களைத் தக்க விளக்கத்துடன் எழுதவேண்டுமென்று முற்பணம் வழங்கப்பட்டதால் பதிப்பாளரின் இந்த வேண்டுகோளும் இனிதாக 1765ல் நிறைவேறிற்று.

(தொடரும்)

ஸ்ரீதர் (யாழ். நகர்)
தினசரி 10-30, 2-30,
கமலஹாசன், ஸ்ரீதேவி,
தாயில்லாமல் நானில்லை
(ஈஸ்ட்மன் கலர்)

## சிங்கப்பூரில்...

(8-ம் பக்கத் தொடர்ச்சி)

கடலில் வீழ்ந்தபோது ஒரு உதவியாளரால் சுயநினைவற்ற நிலையில் அவன் காப்பாற்றப்பட்டான்.

ஏனையவர்களின் கதை......

இந்த உலகிலிருந்தே அவர்கள் துண்டிக்கப்பட்டிருந்தனர்.

நன்றி: Readers Digest.

## ஹிரோஷிமா...

(5ம் பக்கத் தொடர்ச்சி)

தேகங்களில் இத்தகைய அழுக்குகளைச் சேர்த்துவிடுகின்றது. மாசடைந்த புற்களைத் தின்ற பசுக்களின் பாலைக் குடிக்கும் மனிதன் பாதிக்கப்படுகின்றான். இங்கிலாந்தில் பெட்போட் நகரத்தின் தொழிற்சாலைகளிலிருந்துவந்த புகைவழியுடன் கலந்து சுற்றுடலிலுள்ள பசும்பச்சைகளை முற்றாக அழித்துவிட்டது.

பயிர்களின் உச்ச விளைவுக்காகக் கிருமிநாசினிகளை இன்று உலகின் நாடுகள் பலவும் பயன்படுத்துகின்றன.

டி. டி. ரி.

கிருமி நாசினி தயாரிப்பதற்கென்றே நாடுகள் தோறும் தொழிற்சாலைகள் போபால் போன்று உருவாகியுள்ளன கிருமி நாசினிகளால் பூச்சியினங்கள் அழிய, அப்பூச்சிகளைத் தின்ற பறவைகள் அழிவுறுகின்றன. தாவரங்களை உண்ணும் மனிதன் கிருமி நாசினிகளின் விளைவையும் உண்கிறான். இது மனிதன் தனக்கே நஞ்சிட்டுக் கொல்வதாக இருககிறது. டி. டி ரி என்ற கிருமிநாசினி கண்டுபிடித்தமைக்காக நோபல் பரிசு வழங்கப்பட்டது. ஆனல் இன்று டி. டி ரி. யைப் பயன்படுத்தக் கூடாது எனப் பல நாடுகள் தடைவிதித்துள்ளன.

1967ல் ரோறேசன் யோன் என்ற எண்ணெய்க் கப்பல் கோன்வோல் அருகில் மூழ்கியதால் பரவிய எண்ணெயால் ஆயிரக்கணக்கான சடற் பறவைகள் அழிந்துபோயின. ஜப்பானில் மினிமற்றுகடோவில் பாதரசம் கலந்தநீர் மாசடைந்ததால், அதில் வாழ்ந்த மீன்களைத் தின்ற மக்களும், பூனைகளும் இறக்க நேரிட்டது.

உலகில் புதிய கண்டுபிடிப்புக்கள் மனித குலத்தின் அழிவுக்கும் காரணமாகின்றன. நவீன தொழில்நுட்பம் உயிரின அழிவுக்கும் காரணமாகின்றது

போபால் நகரத்தின் ஒரு தொழிற்சாலையில் தற்செயலக நிகழ்ந்த விஷவாயுக் கசிவினல் இறந்தவர்களும் பாதிக்கப்பட்டவர்களும் போக எஞ்சியுள்ள பாதிக்கப்பட்ட மக்களால் உருவாக்கப்படவிருக்கும் வருங்காலச் சந்ததிகள், எத்தனை, எத்தனை ஊனக் குறைகளுடன் பிறப்பார்களோ?

## தனியார் பஸ் ஊழியர்கள் பாதிப்பு

[ஏ. வி மாணிக்கம்]

யாழ். மாவட்டத்தில் தனியார் பஸ் சேவைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளதால் சுமார் 600 ஊழியர்கள் [சாரதி நடத்துநர் உட்பட] கஷ்ட நிலைக்குள்ளாகியுள்ளனர்.

இதனல் பொதுமக்களின் அன்றட பிரயாணச்சேவை வெகுவாகப் பாதிக்கப்பட்டுள்ளது. யாழ். மாவட்ட தனியார் பேரூந்து இயக்குநர் சங்கத் தலைவர் இரா பத்மநாதன், பிரத்தியேக தனியார் போக்குவரத்து அமைச்சருக்கு இப்பிரச்னைகள் சம்பந்தமாக மகஜர் ஒன்றை அனுப்பி வைத்ததுடன் நேரில் சந்திக்கவுமுள்ளார்.

மேற்படி சங்கத்தின் கீழ் 300 மினிபஸ்கள் யாழ்ப்பாணத்திலிருந்து வவனியா, கிளிநொச்சி, முல்லைதீவு, காங்கேசன்துறை, பலாலி, கேரதீவு, பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, அம்பனை, தாவடி, சுன்னகம், சாவகச்சேரி, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களுக்கு சேவையாற்றி வந்தது. [மா]

## குடும்ப உதவித் திட்டம்

(யாழ்ப்பாணம்)

மல்லாகம் அபிவிருத்திச் சங்கம், மாதர் மன்றம், ஆகியவற்றிலுள்ள ஆயுள் கால சாதாரண அங்கத்தவர்களுக்கு குடும்ப உதவித்திட்டம் ஒன்றை இச்சங்கம் நடைமுறைப்படுத்தவுள்ளது.

பிறநாட்டு நிறுவனங்களிடமிருந்து பெறப்படும் நன்கொடைகள் மூலமே இவ்வுதவி வழங்கப்படவுள்ளதாக அபிவிருத்திச்சங்கத் தலைவர் திரு. சு ஸ்ரீபாஸ்கரன் தெரிவித்தார். (மா)

## சைவசமய பாடப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

கொழும்பு விவேகானந்த சபையின் அகில இலங்கை சைவசமய பாடப் பரீட்சை கடந்த இரண்டாம் திகதி நடைபெறமுடியாதநிலை ஏற்பட்ட வடமாகாணப் பாடசாலைகள் மேற்படி பரீட்சையைத் தங்கள் வழமையான பாடசாலைப் பரீட்சைகள் நடந்து முடிந்ததும் நடாத்தும்படி மேற்கூறிய சபையின் பரீட்சை செயலாளர் தெரிவிக்கின்றார். [மா]

விமான டிக்கட்டுக்களை மலிவாகப் பெறுவதற்கும்
பிரான்ஸ் ஜேர்மனி
மற்றும் நாடுகளுக்குச் செல்வதற்கான
பிரயாண ஒழுங்குகளை செய்வதற்கும்
யாழ்நகரில் நம்பிக்கையான ஸ்தாபனம்
ரான்ஸ் யூறே ரவல்ஸ்
தொடர்பு: திரு. மகேந்திரராஜா,
ரான்ஸ் யூறே ரவல்ஸ் இல. 6, நவீன சந்தை (மேல்மாடி) யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23831

அல்வாயூர்க் கவிஞர் மு. செல்லையா நினைவுதினம் இன்று

### பண்பார்ந்த இன்கவிஞன்

பண்புசேர் உள்ளம் கொண்டோன்
பாநலன் வாய்க்கப்பெற்றேன்
அன்பினல் பணிகள் யாவும்
அழகுறப் புரிந்த நல்லோன்
மன்னிய சைவ வாழ்வில்
வழுவிடாக் கொள்கை கொண்டோன்
நன்மை சேர் செல்லையாவாம்
நற்றவக் கவிஞன்தானே

— 'இளங்கோ'

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# படைகளுக்குத் தேவையான ஆயுதங்களும் சாதனங்களும் வந்து சேர்ந்துள்ளன

(கொழும்பு)

அண்மைக் காலத்தில் அதிகரித்துள்ள தீவிரவாதிகளின் வன்செயல்களை அடக்குவதற்கு தேவையான ஆயுதங்களும் சாதனங்களும் வந்துசேர்ந்துள்ளதாக அமைச்சரவை பேச்சாளரான டாக்டர் ஆனந்த திஸ்ஸ டி அல்விஸ் நேற்றுமுன்தினம் நடத்திய பத்திரிகை ஆசிரியர்கள் மகாநாட்டில் கூறினார்.

''எமதுபடைகள் தமதுபணிகளில் பழக்கப்பட்டுவிட்டார்கள். கணிசமான பயிற்சியும் ஆயுதங்களும் இருந்தால் தம் திறமையை அவர்கள் காட்டுவார்கள். ஏற்கனவே காட்டியு உள்ளார்கள்.'' என்று அமைச்சர் சொன்னார்.

பயங்கரவாதத்தின் காரணமாக இலங்கை எதிர்நோக்கும் நிலையை உலகநாடுகள் இப்பொழுது உணர்ந்துவருகின்றன. இதற்கு அமெரிக்காவின் சமீபத்திய கருத்து வெளியீடு ஒருஉதாரணம் என்றார் அமைச்சர் இப்போதையநிலை இனப்பிரச்னைக்கு அப்பாற்பட்டது. என்றும் குறிப்பிட்ட அமைச்சர் 1983ம் ஆண்டு ஜுலை கலவரம் போன்ற ஒரு நிலை ஏற்படாதவரையில் மிகவும் நிதானத்துடன் பத்திரிகைகள் செயல்படவேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## பதற்றமான...

[1ம்பக்கம் 3ம்கலத்தொடர்ச்சி)

ரித்து பரீட்சைகளில் தோற்றுபவர்களும் அது தொடர்பான அதிகாரிகளும் இடையூறின்றி செயல்படுவதற்கான ஏற்பாடுகளைச் செய்தனர்.

### பீதியுடன் வந்தனர்

காலையில் பல பரீட்சை நிலையங்களுக்கு மாணவர்கள் தூர இடங்களிலிருந்து கால்நடையாக வந்ததைக் காணமுடிந்தது. நண்பகல் 12 மணியுடன் ஊரடங்குச் சட்டம் ஆரம்பம் என்ற அறிவிப்பு அவர்களைப் பீதியடையச் செய்திருந்தது.

பல பரீட்சைநிலையங்களுக்கு வெளியே பரீட்சை நேரம், ஊரடங்குச் சட்ட நேரம் என்பன குறித்து பரீட்சார்த்திகளின் பெற்றோர்களும் கேள்விக் குறியுடன் நின்றதைக் காண முடிந்தது.

பரீட்சை முடிவடைந்ததும் மாணவர்களைக் பாதுகாப்பாக ஏற்றிச் செல்வதற்கான போக்குவரத்து வசதிகளும் யாழ் நகர பரீட்சை நிலையங்களில் செய்யப்பட்டிருந்தன.

### பரீட்சையைக் குழப்பினர்

இதே வேளை சில பரீட்சை நிலையங்களில் ஒரு சில அசம்பாவித சம்பவங்கள் பற்றியும் தெரிவிக்கப்பட்டது. தெல்லிப்பழை மஹாஜனக் கல்லூரி. யூனியன் கல்லூரி, வசாவிளான் மகாவித்தியாலயம ஆகிய பரீட்சை நிலையங்களில் இனந்தெரியாதவர்கள் பரீட்சையைக் குழப்பியுள்ளனர். அவர்கள் கேள்வித் தாள்கள், விடைத்தாள்களை அபகரித்துச் சென்றதாகக் கூறப்ட்டது.

யாழ்ப்பாணம் செங்குந்தா இந்துக் கல்லூரியில் நேற்றைய தமிழ் பாடப் பரீட்சையின் முதலாம் பகுதி முடிவடையும் நேரம் பி ப 1·45 மணியளவில் குறுக்கீடு ஒன்று ஏற்பட்டது

இனந்தெரியாத ஆறுபேர் அப்பரீட்சை நிலையத்திலிருந்த பரீட்சார்திகளையும், மேற்பார்வையாளர்களையும் மிரட்டினராம் தொடர்ந்து விடைத்தாள்களைச்சேகரித்துஅவற்றை ஓரிடத்தில் போட்டுக் குவித்த பின்னர் அவற்றுக்குத் தீயிட்டனர் என்றும், பரீட்சார்த்திகள் ஏக்கத்துடன் இச்சம்பவத்தைப் பார்த்தபடி இருந்தனர் என்றும் கூறப்பட்டது.

### பெற்றோர் ஆசிரியர் வேதனை

இதேவேளை வடபகுதியில் பல பெற்றோர்களும், ஆசிரியர்களும் நேற்றைய ஜி ஸி ஈ. பரீட்சை நடைமுறைகள் குறித்து பெரும் கவலையும், ஆத்திரமுமடைந்திருப்பது தெரியவந்தது.

மாணவர்கள் வாகன அனுமதிப்பத்திரங்கள் இன்றி சிரமப்பட்டு பரீட்சை நிலையங்களுக்குவந்துள்ளனர் நண்பகல் 12 மணியுடன் ஊரடங்குஎன்ற அறிவிப்பு அவர்களைக் குழப்பி விட்டிருந்தது. சிலபரீட்சை மண்டபங்களில் ஏற்பட்ட அசம்பாவிதங்கள் குறித்தும் சிலபெற்றோர் அதிருப்தி தெரிவித்தனர்

### முல்லைத்தீவு பகுதியில்

முல்லைத்தீவு பகுதியிலும் பரீட்சைகளுக்குத் தோற்றிய மாணவ, மாணவிகள் பாதிக்கப்படாத முறையில் ஊரடங்குச்சட்டம் அமுல்படுததப்பட்டதாக அரசாங்க அதிபர் திரு. ஞானசந்திரன் தெரிவித்தார்.

பரீட்சைகளுக்குத்தோற்றும் மாணவர்கள், அரசாங்க அதிகாரிகள் மற்றும் மாணவர்களுடன் வரும் பெற்றோர் ஆகியோர் விடயத்தில் ஆயுதப்படையினர் கண்டிப்பாக நடந்து கொள்ளாதவிதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டதாக அவர் தெரிவித்தார். (கி)

## பதுக்காதீர்! விலைகூட்டி விற்காதீர்!

[யாழ்ப்பாணம்]

''தமிழ் மக்கள் பலகஷ்டங்களை எதிர்நோக்கும் இவ்வேளையில், வர்த்தகர்கள், உணவுப் பொருட்களை பதுக்கிவைக்க வேண்டாமென்று யாழ் பிரஜைகள் குழு வேண்டுகோள் விடுத்துள்ளது. உணவுப் பொருட்களை விலை கூட்டி விற்க வேண்டாமென்றும், உணவுப்பொருட்களை பதுக்கி வைத்து தட்டுப்பாட்டுநிலையை ஏற்படுத்த வேண்டாமென்றும் அந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது (க)

## மட்டக்களப்பில்..

[1ம் பக்க 3ம்கலத்தொடர்ச்சி]

ஊரடங்குச் சட்டம் அறிவிக்கப்பட்டிருந்தது காலையில் அவ்வப்பகுதி பொலிஸ் நிலையங்களிலிருந்து பரீட்சை வினாத்தாள்கள் பரீட்சை நிலையங்களுக்கு கல்வித்திணைக்கள அதிகாரிகளால் எடுத்துச் செல்லப்பட்டன.

பரீட்சை நிலையங்களில் எதுவித அசம்பாவிதங்களும் இடம் பெறவில்லை. இவற்றுக்கு வெளியே பாதுகாப்புப்படைகளின ரோந்து நடவடிக்கைகளோ, கண்காணிப்புக்களோ இடம் பெறவில்லை யென்றும் கூறப்பட்டது.

பரீட்சை முடிவடைந்ததும் மாணவர்கள் அமைதியாகக் கலைந்து சென்றதைக் காண முடிந்தது என்று தெரிவிக்கப்பட்டது. (கி)

## மத்துகாமம்....

(1ம்பக்க 5ம்கலத் தொடர்ச்சி)

மடலேவா பகுதியிலுள்ள காடுகளில் பயங்கரவாதிகள் ஒளித்திருப்பதாகக் கிடைத்துள்ள தகவலையடுத்து பொலிஸ்-ராணுவம் கூட்டாக தேடுதல் நடவடிக்கை யொன்றை மேற்கொண்டுள்ளது.

### 4 பவுசர்கள் கடத்தல்

கிளிநொச்சியிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த எண்ணெய் ஏற்றிய நான்கு பவுசர்கள் கடத்தப்பட்டுள்ளன. ஒவ்வொரு பவுசரிலும் 1200 கலன் டீசல் ஏற்றப்பட்டிருந்ததாகவும் வியாழக்கிழமை பகல் இவை கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டதாகவும் கூறப்பட்டது. இவைகளில் மூன்று பவுசர்கள் டீசல் அப்புறப்படுத்திய நிலையில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டதாக அறிவிக்கப்பட்டது

### நுவரேலியாவில் ஒரு சம்பவம்

நுவரேலியாவிலுள்ள மாவட்ட நீதிபதியின் வீட்டுக்கருகில் சிலகறுப்புஉடைதரித்த இனந் தெரியாத நபர்கள் காணப்பட்டதாகவும் அவர்கள் [illegible] பொலிசார் துப்பாக்கிப் [illegible]ரயோகம் செய்ததாகவும் [illegible]ரேலியா மாவட்ட அமைச்[illegible] திருமதி. ரேணுகா [illegible]வீர [illegible]ரிவித்துள்ளார். [illegible] ஸ்தலத் [illegible] பொலிசார் ஒருவ[illegible] காணாததால் துப்பாக்கி பிரயோகம் செய்தனர். ஒருவரும் திருப்பித் தாக்கவில்லையாம்.

## வவனியா...

(1ம்பக்கம்3ம்கலத்தொடர்ச்சி)

மடைந்தது.

வவனியா விமானப்படைத் தளம் அருகேயுள்ள தச்சன் குளத்திலும் வறிய விவசாயிகளின் சுமார் 40குடிசைகள் கொளுத்தப்பட்டன. இப்பகுதியில் ஏற்பட்டுள்ள சேதங்கள் குறித்து வவனியா அரச அதிபரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளது

கடந்த 4ம், 5ம் திகதிகளில் வவனியாவில் பெரும் பதட்டம் நிலவியது கடைகள் யாவும் பூட்டப்பட்டிருந்தன 6ந் திகதி காலை இராணுவம் ஒலிபெருக்கி மூலமாக கடைகளைத் திறக்கும்படி கேட்டுக் கொண்டது இதையடுத்து சிலகடைகள் திறக்கப்பட்டன மக்கள் அவசர, அவசரமாக பண்டங்களை வாங்கிக்கொண்டிருந்தனர்

வவனியா மாவட்டத்தின் எல்லையிலுள்ள ஆசிக்குளம் கிராமமும் வன்முறைகளுக்குள்ளானது இங்கு 50 பேர் கொண்ட கும்பலொன்று தாக்குதல்களை நடத்தியது. இதில் 4 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர் வேறு சிலர் வாள்வெட்டுக்கு இலக்காகி உயிரிழந்தனர்

15 வீடுகள்வரை தீயிடப்பட்டுச் சூறையாடப்பட்டன. இரு இளைஞர்கள் இக்கும்பலை எதிர்த்தபோது சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்பட்டது.

பெண்கள், வயது [illegible] [illegible] காயமடைந்துள்ளனர். யாழ். பல்கலைக்கழக மாணவியான நடனராணி என்பவரும் இங்கு காயமடைந்தவர்களில் ஒருவர்

ஆசிக்குளம் பகுதியில் தாக்குதலுக்குள்ளானவர்களில் பலர் கடந்த ஆண்டு இனக் கலவரத்தின் பின்னர் இங்கு வந்து குடியேறிய மலையகத் தொழிலாளர்கள் என்று கூறப்பட்டது.

ஆசிக்குளம் கிராமோதைய சபைத் தலைவர் இங்கு நடந்த சம்பவங்கள் குறித்து விபரங்களைச் சேகரித்து வருகிறார்

இதேவேளை கடந்த 7ம் திகதி வெள்ளிக்கிழமை வவனியாவில் இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் கிளைக் கட்டிடம் தகர்க்கப்பட்டது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

மேற்குறிப்பிட்ட இடங்களில் வன்முறைக் கும்பல்களின் தாக்குதல்களுக்கு 20 பேர்வரை பலியாகியுள்ளனர் என்றும், லட்சக்கணக்கான ரூபாய்கள் பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டும், சேதமாக்கப்பட்டுமுள்ளன என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (கி)

## ஊரடங்கு நேர மாற்றம்: பிரஜைகள் குழு அதிர்ச்சி

[யாழ்ப்பாணம்]

ஜி ஸி ஈ [சாதாரண] பரீட்சை நடப்பதால், இம்மாதம் 8ம் திகதி முதல் ஊரடங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறும், பரீட்ச்சார்த்திகள் சைக்கிளில் பரீட்சை நிலையங்களுக்குச் செல்ல அனுமதிக்குமாறும் யாழ் பிரஜைகள் குழுவினர் அரசைக் கேட்டிருந்த போதிலும் அக்கோரிக்கை அலட்சியம் செய்யப்பட்டது போல் திடீரென ஊரடங்குச் சட்டத்தை நண்பகல் 12 மணிக்கு அமுலுக்குக் கொண்டுவந்துள்ளது பெரும் அதிர்ச்சியளிப்பதாக உள்ளது.

யாழ். பிரஜைகள் குழு செயலாளர் திரு. ஆர். பாலசுப்பிரமணியம் நேற்று மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊரங்குச் சட்டத்தைத் தளர்த்துமாறு தாங்கள் விடுத்த கோரிக்கையை ஏற்றுக்கொள்ளும் சாத்தியக்கூறு இருப்பதாக நேற்றுமுன்தினம் எமக்குத்தகவல் கிடைத்தது. ஆனால், எதிர்விதமாக நடந்துள்ளது.

இதனால் பரீட்சை எழுதும் மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். பெற்றோர் கவலையடைந்துள்ளனர். பரீட்சை நிலைய உத்தியோகத்தர்களும் பாதிப்படைந்துள்ளனர் என்று அவர்தெரிவித்தார். (க)

## இ. தொ. கா. காரியாலம் தீக்கிரை

(கொழும்பு)

வவனியாவிலுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் காரியாலயம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது.

கடந்த வியாழக்கிழமை நடைபெற்றுள்ள இச்சம்பவம் வடக்கு பயங்கரவாதிகளின் வேலையென ராஜாங்க அமைச்சின் செயலாளர் திரு. ஐ. பி. குணதுங்கா பத்திரிகையாளர்களிடம் கூறினார்.

## பயணிகள்....

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

வும், எரிக்கப்பட்ட பயணிகளில் 16 பேர் சிங்களவர்கள் என்றும், ஒருவர் முஸ்லிம் என்றும் அவர்கள் கூறியதாகவும் வெளிநாட்டடு நிருபர் ஒருவர் டாக்டர் விக்கிரம வீரசூரியாவிடம் தெரிவித்தபோதே இம்மறுப்பை அவர் தெரிவித்தார்.

மேற்படி செய்தி ஏற்கனவே வெளிநாடுகளில் வெளியாகியுள்ளதாம்

பயங்கரவாதத்தை முறியடிக்க இலங்கை இராணுவத்தால் சாத்தியமில்லையெனவும், கடலோரப் பகுதிகளிலிருந்து 2500 பொதுமக்கள் வெளியேற்றப்பட்டுள்ளார்கள் என்றும் வெளிநாட்டு நிருபர்கள் சிலர் அனுபபியுள்ள செய்திகள் தவறென்று கூறிய டாக்டர் வீரசூரிய, 'எமது ராணுவம் தனது ராணுவ நோக்கங்களை எய்துவதற்கு நன்கு தகுதி பெற்றுள்ளது' என கூறினார்.

## யாழ் தேவி...

(1-ம்பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

ரயில் சுமார் ஒரு மணிநேரம் பிந்தியே வந்தது. ஊரடங்கு நேரத்தில் ரயில் வந்துசேர்ந்த போதிலும் பிரயாணிகள் தம் வீடுகளுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை அதிகாரிகள் செய்திருந்தனர்.

## ரூ. 200 கோடி செலவாம்!

(புதுடில்லி)

இந்தியாவில் நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலுக்கு சுமார் 200 கோடி இந்தியரூபாவும்செலவாகும் எனகணிப்பிடப்பட்டுள்ளது.

## மேலும் 5---

(1ம் பக்க 5ம்கலத்தொடர்ச்சி)

சென்றதாகக்கருதப்படுகிறது. மூழ்கடிக்கப்பட்ட கப்பலில் இருந்து காயமுற்ற ராஜேந்திரன், மூக்கையன் ஆகிய இரு மீனவர்களும் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகின்றனர்.

இழுவைப்படகு இந்தியப் பிராந்தியத்திலிருந்தபோதே சுடப்பட்டிருப்பதாகவும் சூட்டுச்சத்தம் ராமேஸ்வரம்கரைக்குக் கேட்டதாகவும் கூறப்படுகின்றது. (இ)

## வன்முறை...

(1-ம் பக்க4ம்கலத்தொடர்ச்சி)

அமிர்தலிங்கம் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

''இலங்கைஅரசாங்கம்இனப்பிரச்னைக்கு அமைதியான தீர்வு காண விரும்பினால் முதலில் அங்கு இடம்பெறும் படுகொலைகளை நிறுத்த வேண்டும்.''

அறுபது பேர் பஸ் வண்டியொன்றில்வைத்துக் கொல்லப்பட்டிருப்பது குறித்து அவர் கருத்துவெளியிடுகையில்கொல்லப்பட்டவர்கள் தமிழர்களானாலும் அப்பயங்கரச் செயல் கண்டனத்துக்குரியது'' என்றார்.

சுமார் 400 தமிழ் மக்கள் வரை அண்மைக்காலங்களில் கொல்லப்பட்டிருப்பதாகவும் திரு. அமிர்தலிங்கம் கூறினார்.

இந்தியப் பிரதமர் திரு.ரஜீவ் காந்திக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் இலங்கைத் தமிழர்களின் உயிர், உடைமைகளுக்குப் பாதுகாப்பளிக்கும் நடவடிக்கைகளை எடுக்கும்படி கேட்டுள்ளார். (கி)

## சிறுமி மீது....

(1ம்பக்கம்5ம்கலத்தொடர்ச்சி)

அதிபர் பணிமனைக்கருகில் இக் குறித்த இளைஞனைக் கண்டு கொண்ட இப்பெண்கள் குழு, அவரைப் பிடித்துச் சிறிது தூரம் ஊர்வலமாக சுலோக அட்டைகள் சகிதம் பஸ்நிலையத்தை நோக்கி, அழைத்துச் சென்றனர்.

குற்றச் சாட்டினை நிரூபிக்குமாறு இளைஞன் சவால் விட்டதாகவும், வீதியில் திரண்டிருந்த மக்கள் மத்தியில்காணப்பட்ட இளைஞர்கள் சிலர், குறித்த பெண்கள் குழுவுடன் இந்த நடவடிக்கை தொடர்பாக வாக்குவாதப்பட்டதாகவும் தெரியவந்துள்ளது.

ஒரு தீவிரவாத இயக்கத்தின் 'பெண்கள்குழு' தான்இந்தநடவடிக்கையை மேற்கொண்டதாகப் பேசப்படுகிறது.

சிலநிமிடத்தின் பின்னர் குறித்த இளைஞன் இப்பெண்கள் பிடியிலிருந்து தப்பிச் சென்றுவிட்டாராம்.

இப் பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63ம் இலக்க அச்சகத்தில் 1984ம்ஆண்டு டிசம்பர் மாதம் 9-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a NewsPare at the General Post office Sri Lanka under Eelanadu 100236/81 Eelanadu P. O. Box 49, Telegram Telephone number 22389 - 24126.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org